[illegible]

V 2 N045 14 Nov 1929

JL

[illegible]211, N28KN

M29·2'45

189080

**KALANILAYAM.** தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
*No. 11*, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு நவம்பர் மீ 14உ [No. 45

OFFICE OF THE R… MAI

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 881
2. அப்பர். (நாடக வியல்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 883
3. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்தந்தாதி) 885
4. மானத சாத்திரம் (Psychology)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A. B. L. 887
5. நம்மாழ்வார் விபவம்
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 889
6. வில்லிபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை. B.A., B. L. 892
7. கம்பராமாயணம் (உலாவியற் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 895
8. வர்த்தமானம் 899

## கலா நிலயம்

### கல்சரை அடையும் வகை

### IV

கல்சர்நிலை முற்றி முதிர்வதற்கோ ரருந்துணையாய் உடனின்றுதவுவன சான்றோரருளிய இலக்கியங்கள். கவிதையைத் தம் உயிர்நிலையாய்ப் பெற்றுள இவை அவ்வுதவியை எவ்வகையில் புரிகின்றனவென்பதுபற்றிக் "கல்சருங் கவிதையும்" என்னுந் தலையங்கங்களில் விளக்கியுளோமாதலின், அன்னவைகளை மீண்டிங் குரைக்காமல் விடுத்து, அவ்விலக்கியங்களல்லாத வேறுசிலவற்றைப் படிப்பது தகுதியன்றெனு முண்மையை எடுத்தியம்பத் தலைப்பட்டோம். இலக்கியங்களல்லா திருந்தும் இக்காலம் பெரும்பகுதியோரால் படிக்கலாவன வர்த்தமானப் பத்திரிகைகளும் நலமில்லா நாவல்களு மாம். இலக்கியங்கள் படிக்கவேண்டிய நேரத்தை இவை வீணே கவர்ந்துகொள்வதாலும், படிப்பனவற்றைக் கருத்தூன்றிப் படித்து மனத்தில் நிறுத்திக்கொள்ளவேண்டுமென்ற உயரிய நினைவிற்கு மாறான பழக்கம் செய்து வைப்பதாலும், வரம்பின்றி இவைகளைப் படித்துவருவது தக்கதென ஏற்றுக்கொள்ளல் இயலாததாகின்றது. ஒருவரது காலமும், கருத்தைச் செலுத்திக் கற்கின்ற பழக்கமும், இவ்வாறு கெடுவதுமன்றி வர்த்தமானப்பத்திரிகைகள், முதிரா மனதுடைய பொதுஜனங்களிற் பெரும்பாலோர் கல்சரை யொருபோதும் அடைவது அரிதாகும்படி, அவரது இயற்கையம்சங்களைக் கெடுக்கவுங் கூடும்.

கல்சர்வேளாண்மையில், தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு முதலிய இயற்கையம்சங்களே விதைகள் எனலாம். அமைதியுற்ற மனமே விளைநிலமாகும். 'நாமும் நல்லவர், இந்நன்னிலையும் நமக்குரியதாய்க் கைகூடவல்லது' என்னும் நம்பிக்கை நீருக்கு நிகராகின்றது. துரும்பையெல்லாம் மலையாக்கிச் செய்யும் ஆரவாரத்தால் மன அமைதியும், மாநுடக் கொடுமையை முயன்று காட்டலால் நம்பிக்கையும், நிலைக்காவண்ணம் புரிகின்ற தன்மை வர்த்தமானப் பத்திரிகைகள் பெரும்பாலும் பெற்று நடக்கின்றன. நீரும் நிலமும் இவ்வாறு வறிதாவதன்றி, வித்துமே கெடுதற்கொத்த குணங்களுஞ்சில அவைகளின்பால் காணலாம். புறவுலகத்துப் போக்குவரவிலேயே மனிதர் கருத்தை இடைவிடாது புகுத்திவருவதால், தெய்வசிந்தனை தேய்ந்துதேய்ந்து இருந்தவிடந் தெரியாமல் அழிந்துவிடுகின்றதைச் சென்றநாள் கூறினோம்.

தம்மை யறியாமலே தமது தருமசிந்தனை சிறிது சிறிதாக மாறும்படி செய்கின்ற திறமும் பெரும்பாலும் வர்த்தமானப் பத்திரிகைகள் பெற்றிருக்கின்றன. தருமம் என்பது, அதற்கு நேரான தமிழ்ச்சொல் அறம் என்பது போன்று, அவ்வவர் இயற்றவேண்டிய கடமையைக் குறிக்கின்றது. அக்கடமைகளுள் தலைமையாயது, பிறர் துன்புறக்கண்டு தாமும் துன்புற்று அத்துன்பத்தைக் களைதற்கு முயல்வதாம். இதனைத் தான் கொடை என்றனர். ஆதலின் தருமம் என்ற சொல் கொடை யென்னும் பொருளிலும் வழங்கிவரலாகின்றது. "ஈதல் அறம்" என்று அறத்தின்

1898
3L
N29·2·1

இலக்கணத்தைச் சுருங்கச் சொல்லினர் மேலோர். எனின், ஈவதை விலக்குவனவெல்லாம் தருமசிந்தனையைத் தளர்வுறச் செய்யும் தீமையனவாம்.

வர்த்தமானப் பத்திரிகைகளில், சிற்சில தவிர, பெரும்பான்மை 'கொடேல்' என்று ஒருவரையும் கைபிடித்து விலக்குவதில்லை என்பது உண்மையே. ஆயினும், வர்த்தமானப்பத்திரிகைகளில் வரும் விஷயங்களைப் படித்துவருபவர் மனத்தில் அவரை அறியாமலே நற்கொடைக்கு நேரெதிராய எண்ணங்கள் சூழ்ந்துகொள்ள லாகின்றன. மனிதருக்கோர் உதவி செய்வதென்றால் சங்கங்கள் கூடியும் , சட்டதிட்டங்கள் நிறுவியும் செய்தாலன்றி வேறு அவரவர் தாமாகத் தம்மாலியன்றதைச் செய்வதென்னும் நினைவு மெல்லமெல்லப் பொதுஜனங்களின் மனத்தைவிட்டு நீங்குகின்றது. ஏழைமை அறியாமை முதலியவைகளின்பால் தமக்கு இயற்கையாயுள்ள இரக்கத்தைச் செயற்கை இயக்கங்களாக மாற்றிவைப்பதற் கேற்றனவாய்ப் பத்திரிகைகளில் வரும் விஷயங்களில் ஒரு பகுதி அமைந்திருக்கின்றன. வறுமையால் வருந்தும் மக்களைக்காண்கின்றபோது சிலருக்கு இரக்கந்தோன்றலாமெனினும் அவர்களுக்கும், தாமே தம் கையாலான அளவு, வறியோர்க்குக் கொடுத்துச் சிற்சிலர் துயரத்தையேனும் ஆற்றலாம் என்ற எண்ணம் எழாவண்ணம், 'இவ்வறுமையைப் போக்குதற்கு முயலாவகை நமது அரசியல்முறை அமைந்திருக்கின்றதென்றும், வணிகமும் கைத்தொழிலும் பெருகித்தான் இவ்வறுமை தீரவேண்டுமென்றும், இதற்கேற்றபடி எந்தவெந்தச் சட்டங்கள் நிறுவலாமென்றும், இதற்கென்று பற்பல சங்கங்கள் சேரவேண்டுமென்றும்,' இன்னபடியெல்லாம் வர்த்தமானப்பத்திரிகைகளில் நிகழ்கின்ற வாதங்கள் இடையூறு செய்கின்றன. எதிரிலே பசித்துநிற்பார்க்குச் சோறிடவேண்டுமென்ற நினைவுமின்றி எண்ணாயிரமைல்களுக்கப்பால் உள்ளவர்களுக்கு உதவி செய்யவென்று ஒரு சங்கம் அமைந்திருந்தால் அதனிற்குப் பொருள் கொடுப்பார் பலர். ஏனெனில் இதனைப் பத்திரிகைகள் 'பிரசாரம்' செய்கின்றன ; வீட்டுவாயிலில் வற்றிய தன் வயிற்றைக்காட்டும் ஏழையோ தன்னுடைய தனிக்குறையைப் பத்திரிகைமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளும் வகையற்றவனா யிருக்கின்றான். இந்த விபரீதத்தை, ஆங்கிலத்தில் சிறந்த நாவலாசிரியர்களுள் ஒருவராய சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) என்பவர், "தூரதிருஷ்டிக்கண்ணாடியால் செய்யுந்தருமம்" (telescopic philanthropy) என்று தக்கதோர் தொடரால் குறித்துள்ளார்

கல்வி வளர்ச்சியிலும் இதேவித குணத்தைக் காணலாம். இவ் விந்தியதேயத்தில் பொதுஜனக் கல்வி மிகவும் குறைந்திருக்கின்றதெனக் கூறிக்கூறிவருந்துவார் யாதுசெய்கின்றனர். நமது அரசாங்கம் கல்வியைப் பற்றித் தன் கவனத்தைப் போதிய அளவு செலுத்துவதில்லை என்று முறையிடுவார். பாடசாலைகளும் சர்வகலாசாலைகளும் நிறுவுதற்கு முற்படுவார்; அச் சர்வகலாசாலைகளில் தாமும் அங்கத்தினர் ஆவதற்கு முயல்வார். பாடமுறைகளைப்பற்றி வாதிப்பார். ஆசிரியர் அமைப்பர்—எல்லாஞ்செய்வர்—ஆனால் தம் வாய் திறந்து ஒருவருக்கு ஒருபாடம் சொல்லி வையார். சங்கங்களும் சட்டங்களும் ஸ்தாபனங்களும் நிறுவுவதும் அவைகளில் தாம் முன்னின்று, தலைவர் உபதலைவர், காரியதரிசி உதவிக்காரியதரிசி, நிர்வாகக்கூட்டத் தங்கத்தினர், என்னும் இந்தப் பேர்களை வகிப்பதும், அப்பேரிற்குரிய சிறிய அதிகாரங்களைச் செலுத்துவதும், அதனால் ஏதேனும் வருவாயும் உண்டாயின் அதனைப் பெறுவதும் ஆகிய இன்னவிதகருமங்களால் கல்வியெனுந் தருமத்தைத் தாம் புரிந்துவருவதாக நினைத்துக்கொள்கின்றனர். இவ்வித நினைவை எழுப்பி நிலைநிறுத்துவதற்கு வர்த்தமானப்பத்திரிகைகள் ஒருவாறு காரணமாகின்றன. கல்வியில்லான் ஒருவனைக் கண்டக்கால், "இவனுக்கு நாம் கற்பித்தல் வேண்டும்" என்று நமது இயற்கைத் தருமசிந்தனை தூண்டுகின்றது. இச்சிந்தனைக்கு இடையூறு இல்லையெனில் அது ஓரளவுநடைபெறும். ஆனால் வர்த்தமானப்பத்திரிகைகளில் வழங்கலாகின்ற விடயங்களில் பழகிய மனமானது, உடனே, "நாட்டுக்கு நாடு படித்தவர் தொகையின் வேறுபாட்டையும், நம் நாட்டுக் கல்விமுறைகளில் இருக்கின்ற "ஊழல்களையும்," பணக்காரர்கள் கல்வி விஷயமாய்ச் செலவுசெய்யாமல் வீண் வழிகளில் செலவு செய்வதையும், பற்றி நினைத்துநினைத்து அலைபாயத் தலைப்படுகின்றது. இதனால் ஆரவாரம் அதிகப்படுவதன்றி வேறொன்றும் விளையாமை காண்கின்றோம். கல்வியைப் பேசுவோரெல்லாம், கல்விக்காக 'உழைப்பவ' ரெல்லாம், வேறுவகைகளில் இவ் வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு இலக்காகி நிற்பவரனைவரும், தத்தம் வரையில் தம்மைச் சூழ்ந்திருப்பவர்களுக்குத் தாமே, சட்டங்களையும் சர்வகலாசாலைகளையும் பொது ஸ்தாபனங்களையும் எதிர்பார்க்காமல், அவ்வவர் சக்திக்கு ஏற்றவாறு, ஒழிந்த நேரங்களில் போதித்து வருவாராயின், நாலைந்து வருடங்களுக்குள் இவ்விந்திய நாடட்டங்களும்—(ஆரம்பக் கல்வி நடுத்தரக்கல்வி, உயர்தரக்கல்வி, கட்டாயக் கல்வி, ஆண்கல்வி பெண்கல்வி, சிறுவர்கல்வி வாலிபர் கல்வி என்னுமித் திட்டங்களெல்லாங்கிடக்க)—பாவரும் சிறந்த கல்விமான்களாகாது தீர்வாரோ!

இவ்விதமே, வர்த்தமானபத்திரிகைப்பழக்கம், மனிதருக்கு இயற்கையாயுள்ள பகுத்தறிவு தன் நெறியில் நடவாமற் செய்கின்றது என்பது புதுமையன்று. சுயநலங் கருதிச் சிலரும், ஒருநலமுங் கருதாச் சிலரும், கருதிய நலத்திற்கு நேர் எதிராய்ப் பலரும், ஓயாமல் உரைத்துவருகின்ற வாசகங்கள், பொதுஜனங்களின் மனதிற் தோய்ந்துதோய்ந்து, ஓங்கிய குரலில் உரைப்பதெல்லாம், வேறோர் குரல் இதனினும் அதிகமாய் ஒலிக்கும்வரை, உண்மையே என்று அவர்கள் எண்ணி விவகரிக்கும்படி செய்கின்றன. இல்லையெனில், இந்த ஓட்டெடுக்கும் பெட்டிக்குள் மாநுட வாழ்க்கையின் மேன்மையெலாம் அடங்கியிருக்கின்றதென்று இவ்வுலகத்தில் இத்தனைஜனங்கள் அப்பெட்டிக்குள் போடுவதற்கும் புகுவதற்கும் படபடப்பாரோ! எல்லாரும் ஒன்றைச்சொல்லிவருவதாலேயே அது நேரிதாயிருக்கவேண்டுமென்ற நியதியில்லை. மாத்யூ ஆர்னால்ட் (Mathew Arnold) எடுத்துக்காட்டியபடி மாந்தரிற் பெரும்பகுதியோர் உரைப்பன பல உண்மைநெறிக்கு மாறாக இருப்பதுங்கூடும்.



1929 MADRAS

# அப்பர்

## 7. அப்பரும் நாடக வியலும்

[ 865 வது பக்கத் தொடர்ச்சி ]

### iv கூத்துநடத்து முறைகளும் அதன் பிரிவுகளும்.

வரி:—இனி, அப்பர் தேவாரத்தில் வரிப்பாட்டுகளுளவோ வென்பதை ஆராய்வதன்முன் வரி யென்பது யாதெனக் காண்போம்:—

வரியாவது, அவரவர் பிறந்த நிலத்தன்மையும், பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தல். அது கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி யென எட்டுவகைப்படும்.

**கண்கூடாவது**, பிரியதரிசனம். அதாவது காட்சி. அது ஒருவர் கூட்டவன்றித் தலைவி தானே வந்து நிற்கு நிலைமை:—

> கண்கூ டென்பது கருதுங் காலை
> யிசைப்ப வாராது தானே வந்து
> தலைப்பெய்து நிற்கும் தன்மைய தென்ப.

**காண்வரியாவது** அழைக்க வந்து போகச்சொல்லிப் போகிய நடம்:—

> காண் வரி யென்பது காணுங் காலை
> வந்த பின்னர் மனமகிழ் வுறுவன
> தந்து நீங்குந் தன்மைய தாகும்.

**உள்வரி** யென்றது வேற்றுருக்கொண்டு நடித்தல். பாண்டவர் பிறிதுருவங் கொண்டதுவு மதுவேயாம்.

> உள்வரி யென்ப துணர்த்துங் காலை
> மண்டல மாக்கள் பிறிதோ ருருவங்
> கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே.

[மண்டலமாக்கள் - அரசர்]

**புறவரியாவது** தலைவனுட னணையாது புறத்து நின்று விளையாடுவது:—

> புறவரி யென்பது புணர்க்குங் காலை
> யிசைப்ப வந்து தலைவன்முற் படாது
> புறத்துநின் றாடி விடைபெறு வதுவே.

**கிளர்வரி** யென்பது, நடுநின்றார் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிற்பது.

> கிளர்வரி யென்பது கிளக்குங் காலை
> யொருவ ருய்ப்பத் தோன்றி யவர்வா
> யிருபுற மொழிப்பொருள் கேட்டுநிற் பதுவே.

**தேர்ச்சிவரி** யென்பது, நாயகனது கிளைகட்குத் தன் துன்பங்களைத் தேடித்தேடிச் சொல்லுதல்:—

> தேர்ச்சி யென்பது தெரியுங் காலைக்
> கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முன்
> பட்டது முற்றது நினைஇ யிருந்து
> தேர்ச்சியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும்.

**காட்சிவரி** யென்பது, தன் வருத்தத்தைப் பலருங் காண நடித்தல்:—

> காட்சிவரி யென்பது கருதுங் காலை
> கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முனர்ப்
> பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே.

**எடுத்துக்கோள்வரி** யென்பது, தான் கையறவெய்தி வீழ்ந்தாளாக வீழ்ந்து, அயலார் தன்னை எடுத்துக் கொள்ளும்படி நடித்தல்:—

> எடுத்துக் கோளை யிசைக்குங் காலை
> அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவ
> ரெடுத்துக் கோள்புரிந்த தெடுத்துக்கோளே.

இவ்வெட்டுவகை வரிகள் நடிக்கும்போது, அவ்வவ்வற்றிற்குத் தக்க பாட்டுகள் உள. அவற்றை வரிப்பாட்டென்பர். அவற்றின் பண்ணும் பாணியும் திறமும் செயலும் ஒருவகையில்லை. முகமுடை வரியென்றும், முகமில் வரியென்றும் படைப்பு வரியென்றும், நாடக விலக்கணம் இக்கவிகளைப் பிரிக்கும். சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் முகமுடைவரியென வெடுக்கப்பட்ட செய்யுளையும் அதுபோன்ற தேவாரத் திருப்பதிகத்தையும் நோக்குவோமாயின் அப்பர் நாடகவியலில் வரிப்பாட்டுகளையும் எவ்வாறு இலக்கணச் சுத்தஞ்செய்து பாடினாரெனக் காணலாகும்.—

சிலப்பதிகாரம்-கானல் வரி.

> திங்கண் மாலை வெண்குடையான்
> சென்னி செங்கோ லதுவோச்சிக்
> கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
> புலவாய் வாழி காவேரி
> கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
> புலவா தொழிதல் கயற்கண்ணாய்
> மங்கை மாதர் பெருங்கற்பென்
> றறிந்தேன் வாழி காவேரி! 1
>
> மன்னு மாலை வெண்குடையான்
> வளையாச் செங்கோ லதுவோச்சிக்
> கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
> புலவாய் வாழி காவேரி
> கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
> புலவா தொழில் கயற்கண்ணாய்
> மன்னு மாதர் பெருங்கற்பென்
> றறிந்தேன் வாழி காவேரி! 2
>
> உழவ ரோதை மதகோதை
> யுடைநீ ரோதை தண்பதங்கொள்
> விழவ ரோதை சிறந்தார்ப்ப
> நடந்தாய் வாழி காவேரி
> விழவ ரோதை சிறந்தார்ப்ப
> நடந்த வெல்லாம் வாய்காவா
> மழவ ரோதை வளவன்றன்
> வளனே வாழி காவேரி! 3

இவை கண்டன கூறிற்றாக யாழினிட்ட பாட்டு.

> " நிலமுத லாகிய வுலகியல் வரிக்கு
> முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே"

இத்தகைய முகமுடைவரியை ஸ்புடம்செய்து திருநாவுக்கரசுநாயனார் நாயகனை சிவபெருமானைப் பாடும் பதிகத்தை அடியிற் காண்க·—

பாவநாசத் திருப்பதிகம்-பண்-பழம்பஞ்சுரம்.

> பற்றற் றார்சேர் பழம்பதியைப்
> பாசூர் நிலாய பவளத்தைச்
> சிற்றம் பலத்தெந் திகழ்கனியைத்
> தீண்டற் கரிய திருவுருவை

வெற்றி யூரில் விரிசுடரை
விமலர் கோனைத் திரைசூழ்ந்த
வொற்றி யூரெம் முத்தமனை
யுள்ளத் துள்ளே வைத்தேனே. 1

ஆனைக் காவி லணங்கினை
யாரூர் நிலாய வம்மானைக்
கானப் பேரூர்க் கட்டியைக்
கானூர் முளைத்த கரும்பினை
வானப் பேரார் வந்தேத்தும்
வாய்மூர் வாழும் வலம்புரியை
மானக் கயிலை மழக்களிற்றை
மதியைச் சுடரை மறவேனே. 2

மதியங் கண்ணி நாயிற்றை
மயக்கந் தீர்க்கு மருந்தினை
யதிகை மூதா ரரசினை
யையா றமர்ந்த வையனை
விதியைப் புகழை வானோர்கள்
வேண்டித் தேடும் விளக்கினை
நிதியை ஞானக் கொழுந்தினை
நினைந்தேற் குள்ள நிறைந்ததே. 3

புறம்ப யத்தெம் முத்தினைப்
புகலூ ரிலங்கு பொன்னினை
உறந்தை யோங்கு சிராப்பள்ளி
யுலகம் விளக்கு ஞாயிற்றைக்
கறங்கு மருவிக் கழுக்குன்றிற்
காண்பார் காணுங் கண்ணுனை
யறஞ்சூ ழதிகை வீரட்டத்
தரிமா னேற்றை யடைந்தேனே. 4

கோலக் காவிற் குருமணியைக்
குடமூக் குறையு விடமுணியை
ஆலங் காட்டி லந்தேனை
யமரர் சென்னி யாய்மலரைப்
பாவிற் றிகழும் பைங்கனியைப்
பராய்த் துறையெம் பசும்பொன்னைச்
சூலத் தானைத் துணையிலியைத்
தோளைக் குளிரத் தொழுதேனே. 5

மருக லுறைமா ணிக்கத்தை
வலஞ்சு ழியினம் மாலையைக்
கருகா வூரிற் கற்பகத்தைக்
காண்டற் கரிய கதிரொளியைப்
பெருவே ளூரெம் பிறப்பிலியைப்
பேணு வார்கள் பிரிவரிய
திருவாஞ் சியத்தெஞ் செல்வனைச்
சிந்தை யுள்ளே வைத்தேனே. 6

எழிலா ரிராச சிங்கத்தை
யிராமேச் சுரத்தெம் மெழிலேற்றைக்
குழலார் கோதை வரைமார்பிற்
குற்றா லத்தெங் கூத்தனை
நிழலார் சோலை நெடுங்களத்து
நிலாய நித்த மணாளனை
யழலார் வண்ணத் தம்மானை
யன்பி லணைத்து வைத்தேனே. 7

மாலைத் தோன்றும் வளர்மதியை
மறைகாட் டுறையு மணாளனை
யாலைக் கரும்பி னின்சாற்றை
யண்ணா மலையெம் மண்ணலைச்
சோலைத் துருத்தி நகர்மேய
சுடரிற் றிகழுந் துளக்கிலியை
மேலை வானோர் பெருமானை
விருப்பால் விழுங்கி யிட்டேனே. 8

சோற்றுத் துறையெஞ் சோதியைத்
துருத்தி மேய தூமணியை
யாற்றுப் பழனத் தம்மானை
யால வாயெம் மருமணியை
நீற்றிற் பொலிந்த நிமர்திண்டோள்
நெய்த்தா னத்தெந் நிலாச்சுடரைத்
தோற்றக் கடலை யடலேற்றைத்
தோளைக் குளிரத் தொழுதேனே. 9

புத்தூ ருறையும் புனிதனைப்
பூவ ணத்தெம் போரேற்றை
வித்தாய் மிழலை முளைத்தானை
வேள்விக் குடியெம் வேதியனைப்
பொய்த்தார் புரமூன் றெறிந்தானைப்
பொதியின் மேய புராணனை
வைத்தே னென்றன் மனத்துள்ளே
மாத்தூர் மேய மருந்தையே. 10

முந்தித் தானே முளைத்தானை
மூரி வெள்ளே றூர்ந்தானை
யந்திச் செவ்வான் படியானை
யரக்க னாற்ற லழித்தானைச்
சிந்தை வெள்ளம் புனலாட்டிச்
செஞ்சொன் மாலை யடிசேர்த்தி
எந்தை பெம்மா னென்னம்மா
னென்பார் பாவ நாசமே. 11

இம் முகமுடைவரி, மூன்றடி முதலாக ஏழடி யீறுகவரும். அமண ரேவிய யானையை அப்பர்வெருட்டிய திருப்பதிகமும் இதன்பாற் படும்.—

கரந்தன கொள்ளி விளக்கும்
கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும்
பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாளர்
அறியப்ப டாததோர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நா
மஞ்சுவ தியாதொன்று மில்லை
யஞ்ச வருவது மில்லை.

—திருக்கெடில வடவீரட்டானம்-பண். காந்தாரம்-6

அப்பர் பாடியது, அரங்கிடை நூலறிவாளர் கண்டறியக் கடினமான ஒருவகை வரிப்பாட்டேயாம்.

இனி முகமில்வரி, சிலப்பதிகாரத்தில் எவ்வாறு பாடப்பட்ட தென்பதும், அப்பர் அவ்வகைப்பாட்டைக் கையாளும்போது எவ்வாறு பாடுகின்றனரென்பதும் காண்போம்.—

(சிலப்பதிகாரம்-கானல்வரி)

வலைவாழ்நர் சேரி வலையுணங்கு
முன்றின் மலர்கை யேந்தி
விலைமீ னுணங்கற் பொருட்டாக
வேண்டுருவங் கொண்டு வேறோர்
கொலைவே னெடுங்கட்
கொடுங்கூற்றம் வாழ்வ
தலைநீர்த் தண்கான லறியே
னறிவேனே லடையேன் மன்னோ.

என்னும் முகமில் வரிப்பாட்டை, அப்பர் மீனை திடத்தைக் கெடுக்கவந்த தேவகன்னியரை உபேட்சை காட்டிப் பாடிய செய்யுட்களோடு ஒப்புநோக்குக.—

(திருவாரூர்-திருத்தாண்டகம்)

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள்! தீவினைகா டிருவே! நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச்செய்யு
மெம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றே
னிடையிலேன் கெடுவீர்காள்! இடறேன்மின்னே! 1

சுருக்கமொடு பெருக்கநிலை நீத்தல் பற்றித்
துப்பறையென் றனைவீரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும் செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேன் மிக்க
தருக்கிமிக வரையெடுத்த வரக்க னாகந்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியவெம் பெம்மான் பாதத்
திடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே! 10

வரிப்பாட்டுகளை நாடகவியலில் பற்பல விதமாய் மேலோர் வகுத்தனர். அவ் வகுப்புகளில் சிறுபான்மையே அப்பர் தேவாரத்திற் காண்கின்றோம். ஏனெனில் தேவாரம் நாடக நூலன்று. முத்தமிழ்ச் செல்வரான அப்பர் தன்னை மறந்து பாடுங்காலையில் சில பதிகங்கள் நாடகத் துறைகளிலும், சில ஆராய்வதற்கரிய இசைகளிலும் விளங்கும். அவை பெரும்பாலும் நாலாந் திருமுறையாகிய அப்பர் முதற்றிருமுறையிலேயே காணப்படும். கேட்பனபோலவும், கிளப்பன போலவும், அஃறிணைப் பொருள்கள்மருங்கிற் பாடிய திருப்பழனம் - பண் - தக்கராகமென்னும் திருப்பதிகம்-காட்சிவரிக்கும் தேர்ச்சிவரிக்கும் உதாரணமாகும்

தேர்ச்சிவரி

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ?
[தல்காள்
கண்டகங்காள்! முண்டகங்காள்! கைதைகாள் நெய்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடமூழ்கி மற்றவனென் றளிர்வண்ணங்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளா தொழி
[வானோ?

[குறிப்பு:—வரி, பண், பண்டாரங்கவேடம், பாட்டு என்னும் மொழிகள் நாடகச் சாயலை நினைப்பூட்டும்.]

காட்சிவரி

கூவைவாய் மணிவரன்றிக்
கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப்
பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன்
கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாள்! மழலைகாள்!
போகாத பொழுதளதே!

# தமிழ்ப் பாடம் 97.

[ அஷ்ட பிரபந்தம். ]

[ 870-வது பக்கத் தொடர்ச்சி ]

## திருவரங்கத் தந்தாதி.

மலருந்தி மேல்விழ மெய்நெரித் தான்வைய
மேழுந்துஞ்சா
மலருந்தி னரங் கன்குற ளாய்மண்
ணளந்தவந்நாண்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி
மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி
மணியொத்ததே 12

பதப்பிரிவு:—மலர் உந்தி மேல் விழ மெய் நெரித்தான் வையம் ஏழும் துஞ்சாமல் அருந்தினன் அரங்கன் குறள்ஆய் மண் அளந்த அ நாள் மலரும் திவாகதிர் வள் குடை ஆய் முடி மா மணி ஆய் மலர் உந்தி ஆய் திரு தாள் விரல் ஆழி மணி ஒத்தது.

பதவுரை.

மலர்-மல்யுத்தம் செய்யும் வீரர்கள், உந்தி-தள்ளி, மேல்-தன்மேல், விழ-வந்து விழுந்தபோது, மெய்-அவர்களது உடலை, நெரித்தான்-நொருக்கிக் கொன்றவனும்; வையம்-உலகம், ஏழும்-ஏழையும், துஞ்சாமல்-(பிரளயகாலத்தில் அவை) அழியாதபடி, அருந்தினன்-உண்டவனும் ஆகிய, அரங்கன்-திருவரங்கன்; குறள் ஆய்-மாவலியினிடம் வாமனனாக வந்து, மண்-உலகத்தை, அளந்த-அளந்துகொண்ட, அ நாள்-அன்றையதினம், மலரும்-விரிந்து விளங்குகின்ற, திவாக் கதிர்-சூரியனானது,(அவருக்கு) வள்-வளப்பமுடைய, குடை ஆய்-குடை ஆகியும்; (பிறகு) முடி-கிரீடத்திலுள்ள, மா-சிறந்த, மணி ஆய்-இரத்தினம் ஆகியும், (பிறகு), மலர்-தாமரைபோன்ற, உந்தி ஆய்-நாபி ஆகியும்,(கடைசியில் அவரது)திரு-அழகிய, தாள்-பாதத்திலுள்ள, விரல்-விரலில் அணிந்த, ஆழி-மோதிரத்தில் பதித்த, மணி-இரத்தினத்தை, ஒத்தது-போன்றது.

கருத்து:—வாமனனாகிவந்த திருமால் திருவிக்கிரமனாக வளர்ந்தவிதத்தைக் கவி இங்குச் சூரியனைக் கொண்டு அளந்துகாட்டுகின்றார். இவருடைய உருவம் சூரியமண்டலத்தைச் சமீபித்தபோது, அச்சூரியன் இவருக்குக் குடைபோல் தோன்றியது. பின்னும் வளர்ந்து இத்திருவிக்கிரம உருவம் சூரியமண்டலத்தைத் தொட்டபோது, அவரது கிரீடத்தின் சிகாமணிபோல் சூரியன் அமைந்தது. வளர்ச்சி அதனோடு நிற்கவில்லை. மேன்மேலும் சூரியனைக் கடந்தும் உயர்ந்துபோகையில், அச்சூரியன் இவரது நாபி இருக்கும் அளவில் நிற்கலாயிற்று. இன்னும் வளர்கின்றார் எம்பெருமான். அப்படி வளர்ந்த உருவத்திற்கேற்ற பருமன் பாதத்திற்கு மிருக்குமாகையால், அப்பாதமே பூமிமுதல் சூரியன்வரையில் நிரம்பி

யிருக்க, அவரது கால்விரல் மோதிரத்தின் மணிபோல் சூரியன் தென்பட்டது. இதனால் திருவிக்கிரமாவதாரத்தின் உயரமும் பருமனுந் தெரியவரலாகும்.

விளக்கம்:—'மலருந்தி' என்னும் யமக வெழுத்துக்கள், மலர் உந்தி, என இரண்டு சொற்களாய் முதலடியில் பிரியும். மல்லர் என்பது மலர் என்று தொக்கது முதற்சொல். உந்தி என்பது தள்ளி என்னும் பொருளுடைய வினையெச்சம்.

கிருஷ்ணாவதாரத்தில், கம்சனும் துரியோதனனும் தன்னைக் கொல்வதற்கு ஏவிய மல்லர்களைத் திருமால் கொன்றது முதலடியில் குறித்த விஷயம்.

இரண்டாமடியில், மல் அருந்தி(னான்) எனப் பிரியும். மல், என்பது முதலடியீற்றிலுள்ள 'துஞ்சா' என்பதோடு சேர்ந்து துஞ்சாமல் என்ற சொல் ஆகின்றது. பின்வரும் 'அருந்தி' என்பது, அருந்தினான் என்பதன் முதன் நான்கு எழுத்துக்கள்.

மூன்றாமடியில், மலரும் தி(வாக்கதிர்) எனப் பிரியும். மலரும் என்பது பெயரெச்சம். திவாக் என்பதன் முதல் எழுத்து தி. திவாக் கதிர், என்பதற்குப் பகற்போதில் பிரகாசிக்கும் கதிர் என்பது அர்த்தம்; சூரியனைக் குறிக்கின்றது.

நான்காம் அடியில், மலர் உந்தி, எனப் பிரியும். மலர்போன்ற நாபி என்பது அர்த்தம். இங்கு உந்தி, பெயர்ச்சொல்.

---

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப் பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோல மாயவன்றன்
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பரல் போன்ற குவலயமே. 13

பதப்பிரிவு:— குளம் படி நெய் அடிசிற்கு ஒத்ததோ கொள்ள பற்றியதோ குளம் படியில் திங்கள் சேர் அரங்கா கோலம் ஆய அன்று உன் குளம் படி காட்டும் பிறை மறுப்போல் ஒரு கோடு இருந்து குளம்பு அடியின் அகத்துள் பரல் போன்ற குவலயம் ஏ.

அன்வயம்:—குளப்படியில் திங்கள்சேர் அரங்கா, கோலம் ஆய அன்று உன் குளப்படி காட்டும் பிறை மறுப்போல் ஒரு கோட்டிருந்து குளப்படியின் அகத்துள் பரல் போன்ற குவலயம்—குளம் படிநெய் அடிசிற்கு ஒத்ததோ கொள்ளப் பற்றியதோ.

பதவுரை.

குளம் - சந்திரபுஷ்கரிணி என்னும் குளத்தின், படி - படிகளில், திங்கள் - சந்திரனானவன், (தக்ஷனால் பெற்ற சாபத்தைத் தீர்த்துக்கொள்ளத் தவம் செய்யும்பொருட்டு) சேர்-வந்துசேர்ந்த, அரங்கா - திருவரங்கத்தில் இருப்பவனே,

கோலம் ஆய - நீ வராகம் ஆன, அன்று - அப்பொழுது, உன் - உன்னுடைய, குளம் - நெற்றியின், படி - விதமாகிய வடிவத்தை, காட்டும் - போன்று இருக்கின்ற, பிறை - பிறைச்சந்திரனது, மறுப்போல் களங்கத்தைப்போல், (உன்னுடைய) ஒரு - ஒரு, கோடு-கோரப்பல்லில், இருந்து-இருந்ததும், (பிறகு) குளம்பு - குளம்பு உடைய, அடியின்-காலின், அகத்துள் - உட்புறத்தில், 'பரல்-பருக்கைக்கல், போன்ற-போன்று இருந்ததும் ஆன, குவலயம்-இந்தப் பூமியானது,

குளம்-வெல்லமும், படி - ஒரு படி அளவு, நெய்-நெய்யும் சேர்ந்து சமைத்த, அடிசிற்கு - சர்க்கரைப் பொங்கலுக்கு, ஒத்ததோ-சமானமாக இருந்ததோ; (அல்லது) கொள்ள - உன்கையில் எடுக்கத்தான், பற்றியதோ - போதியதா யிருந்ததோ! (இயம்புவாய்.)

விரிவுரை:—ஒருவர் ஒன்றினை உண்பதாயின், அது சுவைக்காகவேனும் அல்லது வயிறு நிறைவதற்காகவேனும் ஏற்றதாயிருக்கவேண்டும். ருசிக்கு மாத்திரம் உண்கின்ற பண்டம் அளவிற் குறைந்திருக்கும்; வயிறு நிறைவதற்கு வேண்டிய உணவு அதிகமாயிருக்கும். "பெரும, இவ்வுலகினை நீ உண்டது எதற்காக, சுவைக்காகவா, அல்லது வயிறு நிறைவதற்கா?" என்று கவி வினவுகின்றார். அவ்வினாவில் இவ்விரண்டிற்கும் ஆகாது என்னுங் குறிப்பு அடங்கியிருக்கின்றது. மண்ணும் நீரும் கலந்த இந்தக் குவலயம் வெல்லமும் நெய்யும் சேர்த்துச் சமைத்த சர்க்கரைப்பொங்கலோ ஆகாது. ருசி இல்லாவிட்டாலும் வயிறு நிறைவதற்குத் திருமால் இவ்வுலகை உண்டான் என்று எண்ணவோ இடமில்லை. கையில் எடுக்கக்கூட அவனுக்கிது பற்றாதே. அவ்வாறு பற்றாதென்பதற்கு ஆதாரமாய் எம்பெருமான் வராக அவதாரம் எடுத்து, இரணியாக்ஷனால் கடலில் கொண்டொளிக்கப்பெற்ற இப்பூமியைத் தன் மருப்பில் தாங்கிவந்தபோது, அவ்வராக உருவத்தின்முன் இப்பூமியின் அளவு எத்துணைச் சிறியதாய்த் தோன்றிய தென்பதை இச்செய்யுள் காட்டுகின்றது. பிறைச்சந்திரனது நடுவில் களங்கம் எப்படிக் காண்கின்றதோ, அப்படியே இக் குவலயம் அவ்வராகத்தின் மருப்பில் தூசி படிந்திருந்தது போல் தோன்றியதாம். பல்லில் படிந்த ஒரு தூசியைத் தின்று வயிறுநிறைந்தாருண்டோ! அதுவுமன்றி, இப்பூமியைக் கொண்டுவந்து வைத்துவிட்டு அவ்வராகம் நின்றபோது, அதன் பாதத்துக் குளம்பிற்குள் ஒரு பருக்கைக் கல்லளவிலேயே, பூமி கிடந்தது. அந்தக் கல்லைத்தின்று வயிறு நிறையுமோ! ஆதலின், திருமால் வையமுண்டது உலகத்தவர் பிரளயத்திலிருந்து காக்கப்பெறுவதற்கல்லாது, தன்னுடைய நலங்கருதி அன்றென்பதை இவ்வண்ணம் அழகாகக் கவி விளம்புகின்றார்.

விளக்கம்:—'குளப்படி' என்னும் யமக வெழுத்துக்கள், முதல் மூன்றுஅடிகளிலும், குளம் படி, என்ற இரண்டு சொற்களாகவே பிரியும். முதல் அடியில்; குளம் வடமொழி, வெல்லம் என்பது அர்த்தம். படி, எட்டாழாக்குக் கொண்ட அளவை. இரண்டாவது அடியில், குளம் - நீர்நிலை, படி - குளத்திற்கு இறங்கும்படி. மூன்றாவது அடியில், குளம், வடமொழி, நெற்றி என்பது அர்த்தம். படி, அப்படி இப்படி என்பதிற்போல, விதம் அல்லது மாதிரி என்ற பொருளுடையது. குளப்படி காட்டும், என்பதற்கு 'நெற்றிமாதிரி யிருக்கும்' என்பது பொருள். திருமாலினது நெற்றிக்குப் பிறைச்சந்திரன் உவமையாகின்றது. உருவத்திலும் ஒளியிலும் பிறைச்சந்திரன் போன்று வராகத்தின் தந்தம் இருக்கின்றது. எனவே,



பிறையிலிருக்கும் மறுவிற்கு அந்தத் தந்தத்தில் தாங்கிவரப்பெற்ற பூமி சமானமாயிற்று.

நான்காவது அடியில், குளம்பு அடி, எனப்பிரியும். காலின் குளம்பு என்பது பொருள்.

இலக்கணம்.

நிலைமொழியிறுதியிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்து இருக்கும் சொற்கள் புணரும்போது உடன்படுமெய் வந்து அவைகளின் ஒலியைப் பொருந்தும்படி சேர்த்துவைக்கின்ற விதங்களைக் கூறி வந்தோம்.

நிலைமொழியிறுதியில் இ ஈ, ஐ, என்ற மூன்று உயிரெழுத்துக்களில் ஏதாவதொன்று இருக்க, வருமொழிமுதலில் பன்னிரண்டு உயிரில் எதுவானாலும் வருமாயின், யகர உடம்படுமெய் வரலாகும்.

நிலைமொழி இறுதி ஏ என்ற உயிராயின், வருமொழிமுதலில் எந்த உயிர் வரினும், யகர உடம்படுமெய்யாவது வகர உடம்படுமெய்யாவது வரலாகும். எப்பொழுது யகரம் வருமென்றும், எப்பொழுது வகரம் வரும் என்றும் முன்னர் (வால்யூம் 2, பக்கம் 788) விளக்கியிருக்கின்றோம்.

நிலைமொழியிறுதியில், முன் சொன்ன, இ ஈ ஏ ஐ என்றவைகள் தவிர மற்ற உயிர்கள் இருக்க, வருமொழி முதலில் எந்த உயிரெழுத்து வந்தாலும் வகர உடம்படுமெய் வருமென்று கூறினோம்.

ஆயினும் நிலைமொழியிறுதியில் இருப்பது உகரமாயின், வருமொழி முதல் உயிரோடு அது புணரும்போது வகர உடம்படுமெய் பெறுவதும் உண்டு; பெறாது வேறுவிதமாய்ப் புணர்வதும் உண்டு. ஆதலாற்றான் உகரத்தைப்பற்றி ஒன்றுங் கூறாது இதுவரையில் விட்டுவைத்தோம். இனி இவ்வுகரப்புணர்ச்சிக்குரிய சிறப்புவிதிகளைக் கற்போம்.

நிலைமொழியிறுதியில் இருக்கும் 'உகர உயிர்' என்னாது 'உகரம்' என்று மாத்திரம் கூறுவதற்குக் காரணம் இருக்கிறது. உ என்னும் அவ்வெழுத்து இரண்டு விதமாக ஒலிக்கக்கூடும். ஒன்று வாயைக்கூட்டி உச்சரிக்கப்பெறுவதாய் ஒரு மாத்திரை பெற்று ஒலிப்பது. உலகம், குழந்தை, என்ற சொற்களிற்போல் முதலிலும்; மருட்சி, தொகுதி என்ற சொற்களிற்போல் இடையிலும்; தெரு, மடு, கதவு என்ற சொற்களிற்போல் கடையிலும் நின்று உயிர்க்குற்றெழுத்திற்குரிய ஒரு மாத்திரையுடன் உச்சரிக்கப் பெறுகின்ற இவ்வுகரங்களுக்கு முற்றியல் உகரம், என்று பெயர்.

மொழிக்கு இறுதியிலேயேநின்று, ஆறு அஃது முரசு உப்பு வண்டு வெள்கு, என்பனபோல் க் ச் ட் த் ப் ற் என்னும் வல்லின மெய்யின்மேல் ஏறி இருக்கும் உகரம், வாயை முற்றிலுங் கூட்டப்பெறாமல், அரைமாத்திரை அளவேகொண்டு உச்சரிக்கலாகும். இந்த உகரத்திற்குக் குற்றியலுகரம் என்று பெயர். முற்றியலுகரத்தைப்போல், குற்றியலுகரம் உயிரெழுத்தன்று. இது உயிரெழுத்தின் சிதைவாகும். இது, நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர் மென்றொடர், இடைத்தொடர் என்று அறுவகைத் தொடர்க் குற்றியலுகரங்களாகும். இன்னவைகளின் இலக்கணத்தை முன் (2-வது வால்யூம், பக்கங்கள், 147, 172, 192) விரிவாகக் கூறியிருக்கின்றோமாகையால் அதனை இப்பொழுது ஒருமுறை எடுத்துப் படித்துத் தெளிந்துகொண்டால் மேல்வருவனவற்றைக் கற்பது சுலபமாகும்.

# மானத சாத்திரம்

## PSYCHOLOGY

### நரம்புகள் (Nerves)

847வது பக்கத் தொடர்ச்சி.

திடீர் என இடி இடிக்கின்றது. அவ்வொலி கேட்டுத் திடுக்கிட்டு எழுகின்றேன். மின்னல் கண்கூச மின்னிப் பொலிகிறது. அதுகண்டு ஒளி பொறுக்கமாட்டாமல் கண்ணை மூடுகின்றேன். உலகமானது இவ்வாறு பலவகையாகத் தாக்க, நாம் அதற்குத் தக்கபடி மாறி நிற்கின்றோம். இயற்கைப் பரப்பில் ஏற்படும் மாறுபாட்டுக்கெல்லாம் தக்கவாறு வேறுபட்டு நிற்பதன்றோ வாழ்க்கை. மழைபெய்தால் குடை பிடிக்கின்றோம். குளிரெடுத்தால் மயிர்ப்படாம் போர்த்துக்கொள்ளுகின்றோம். இவ்வாறு உலகத்தோடொட்டி ஒழுகாமற்போனால் நோய்வாய்ப்பட்டு இறக்கவேண்டி வரும். இயற்கைப் பரப்பானது நம்மைப் பலவகையாலும் தூண்டுகின்றது. அதற்குத் தகநாமும் துலங்குகிறோம். வாழ்க்கையானது தூண்டற்கு (Stimulus) எதிர் துலங்கலாகவே (Response) விளங்குகின்றது. கிண்டக் கிளர்தலாகவே கிடக்கின்றது. இயற்கைப் பரப்பிற்கும் நமக்கும், ஒருவகையால் நோக்குமிடத்து, போரொன்று நடக்கின்றது. ஆதலின், புறப்பொருளில் காணக்கிடக்கும் ஊன்றல் எதிரூன்றல், என்ற சொற்களைக்கொண்டு இயற்கைத் தூண்டலையும், நம் துலங்கலையும் விளக்கலாம். ஒலிகேட்டுத் திடுக்கிட்டபோது, ஒலியானது காது வழியாக ஊன்றுகிறது. திடுக்கிட்டெழுதல் நமது எதிரூன்றலாகும். அங்ஙனமே பேரொளி கண்டு கூசிக் கண்ணை மூடியபோது நம்மைத் தூண்டிய பேரொளியானது - கண்ணில் விழுந்து ஊன்றலாகிறது. அதனால் எதிர்துலங்கி நாம் கண்ணை மூடுவது எதிரூன்றலாகிறது. இவ்வெதிரூன்றலோ (Reaction) பலவகை. கண்ணை மூடுவதும் திடுக்கிட்டெழுதலும் தசைநார்களின் (Muscles) செயலாம். இவ்வாறு தசைநார்கொண்டு எதிரூன்றலும் பலவகையாகப் பிரிகின்றது. நமது தசைநார்களில் வரிகளோடு விளங்கும் வரித்தசைநார்கள் (Striped muscles) நாம் வேண்டும் என்றபோது இயங்குவன (Voluntary muscles). அவற்றின் வழியாக வரும் எதிரூன்றலோ, அத் தசைநார்களின் இயக்கவடிவினதாம். தசைநா ரியக்கத் தெதிரூன்றல், என இதனைக் கூறலாம். வரியிலாத் தசைநார்களோ, தாமே

(Unstriped muscles) எப்போதும் இயங்குவன (Involuntary muscles). குருதிஈரல் (Heart) எப்போதும் சுருங்கி விரிந்து குருதியை வெளிப்படுத்தி ஒருவகையாகத் துடித்துக் கொண்டிருக்கிறது. தீனிப்பையானது உணவைப் பிசைந்துகொண்டே போகின்றது; இவையனைத்தும் வரியிலாத் தசைநார்களின் (Unstriped muscles) செயல்களாகும். புலியைக் கண்டபோது, அச்சத்தால் குருதிஈரல் விரைவாகத் துடிக்கின்றது; தீனிப்பையில் பிசைதல் குறைவாகிறது. இங்குப் புலியானது நம்எதிரில் தோன்றியஊன்றலாம்; குருதிஈரல் விரைந்து துடித்தலும், தீனிப்பை உணவைப் பிசையாது நிற்றலும் எதிரூன்றலாம் (Reaction). குருதி ஈரலிலுள்ள தசைநார்களை விரைவாக இயக்குதல் வடிவமாக இவ்வெதிரூன்றல் விளங்குதலின் இதனைத் தசைநார்க்கிளர்ச்சியாம் எதிரூன்றல் எனலாம். தீனிப்பையிலுள்ள (Accelerators) தசைநார்களோ தம்செயல் தடைபட்டு நிற்கின்றன (Inhibtion). ஆதலின் இதனைத் தசைநார்த்தடையாம் எதிரூன்றல் எனலாம். தசைநார் வழியாகவே எல்லா எதிரூன்றல்களும் (Reactions) நிகழ்கின்றன என்பதில்லை. இறந்த எனது தாயின் உருவினைக்கண்டு என்கண்ணில் நீர் கலங்குகிறது. இனிய உணவினைக் கண்டு என்வாயில் நீர் ஊறுகிறது. உமிழ்நீர் கண்ணீர் முதலிய பலவகையான உடனீர்கள் சுரக்கும் ஊற்றுத் தசையுருளைகள் (Glands) பல இருக்கின்றன. எனவே கண்ணீர்வாரல் முதலியன, இவ் ஊற்றுத் தசையுருளைகொண்டு எதிரூன்றலாம்

இயற்கைப்பரப்பு நம்மைத் தாக்குவதை நமது புலனாலேயே அறிகிறோம். இத்தாக்கலானது நம்முள் புகுவதற்குப் புலன்களே வழியாக அமைதலின் அவையே புகுவாயாம். (Receptors). புகுவாய் வழியாகத் தாக்கலை யறிந்தபோது அதற்கேற்ப எதிரூன்றி நிற்கின்றோம். கண்ணைமூடியோ, கண்ணீர் விட்டோ, தசைநார் வழியாகவோ, ஊற்றுத் தசையுருளை வழியாகவோ தொழில்பட்டு நிற்கின்றோம். இயற்கை மாறுபட நாம் வேறுபடுவது அவ்வளவில் முடிகின்றது. கண்ணீர் விட்டோ, கண்ணைமூடியோ, தொழிலுறுமிடத்தை இயங்குவாய் (Effector) எனலாம். புகுவாய்க் கேற்ப இயங்குவாய் தொழிலுறுகின்றமையால் இவையிரண்டிற்கும் ஒரு தொடர்பிருத்தல் வேண்டும். கரடியைக்கண்ணால் காண்கின்றோம். கால்கள் ஓட்டம் பிடிக்கின்றன. கண்ணுக்கும் காலுக்கும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டுமன்றோ? இந்தத் தொடர்பே நரம்புத்தொடர்பாகும்.

இயங்குவாயும் புகுவாயும் என்ற இரண்டோடு இத்தொடர்பு நிற்பதில்லை. இவை யிரண்டினையும் தக்கவழியில் பொருத்திவைக்கும் பொருத்துவாய் (Adjustor) இவற்றிற்கிடையே நடுவிடவமைப்பாக (Central system) கிடக்கின்றது. ஒரு கல்லை வீசி எறிந்தால், எறிந்த வழியே நேராகப் போகிறது. விசையடங்கியதும் கீழே விழுகிறது. தடையுண்டானாலோ தடைமேல் விழுகிறது. கல்லின் கதை என்னவென்று முன்னரே இவ்வாறு கூறுதல் கூடும். ஆனால் நாம் ஒரு பொருளைக் கண்டபோது இன்னவாறுதான் செய்வோமென்று திண்ணமாகச் சொல்லக்கூடுமோ? நேரே ஓடுவோம்; தடை யுண்டானால் சில இடத்து விலகிச் செல்வோம்; சில இடத்து அதைத் தாண்டிக் குதிப்போம்; சில இடத்தே திரும்பிவிடுவோம்; புகுவாய்க்கும் இயங்குவாய்க்கும் நேரான தொடர்பு ஒன்றேதான் உள்ளதென்றால் கரடியைக் கண்டபோதெல்லாம் ஓடிக்கொண்டிருப்போம். ஆனால் நமது எதிரூன்றல்களோ, பல வகையாகக் காணப்படுகின்றன. பலவகையான எதிரூன்றல்களிலும் குறித்த பொழுதில் குறித்த ஒரு எதிரூன்றலே நடக்க வேண்டுமெனப் பொருத்தி வைக்கும் பொருத்துவாய் (Adjustor) ஒன்று, புகுவாய்க்கும் இயங்குவாய்க்கும் இடையே நடுவிடவமைப்பாக விளங்குதல் வேண்டும். புகுவாய் வழியாக இயற்கையின் தாக்கலாம் ஊன்றலை, பொருத்துவாய் அறிந்து அதற்குத்தக்க நாம்புகளை இயக்க, இயங்குவாய் வழியாக எதிரூன்றல் நிகழ்கின்றது.

புகுவாய், இயங்குவாய், பொருத்துவாய், என்ற மூன்றும் உயர்நிலையிலுள்ள உயிர்களிடத்தேதான் காணப்படுகின்றன. இவற்றில் இன்றியமையாதது எது என்பது கீழ்நிலையில் உள்ள உயிர்களை ஆராய்வதால்தான் தெரியவரும். கடற்காற்றுமலரான் (Sea anemone) என்பது ஓர் உயிர்வகை. இவ்வுயிரினத்தைச் சேர்ந்தவை கடலிற் கிடக்கும் கல்மேல் ஒற்றிக் கிடக்கின்றன. இதன் அடிப்புறம் வட்டவடிவினது. அவ்வடிப்புறந்தான் கல்லில் ஒற்றிக் கிடக்கின்றது. மேற்புறத்தில் ஒரு புழையைக் காணலாம். அப்புழையானது உள்ளே ஒரு பெரிய நடுக்குழியில் போய் முடிகின்றது. அந் நடுக்குழிதான் உணவை உண்டு உயிர்ச்சாறுக்குகின்றது; ஆதலின் அதுவே அதன் வயிறுகும். மேற்புறத்திலிருக்கும் அப் புழைவழியாகவே பொருள்களை உண்கிறது. அஃதே அதன் வாயாகும். உண்டபின் எருவானவற்றை அவ் வாய்வழியாகவே வெளியே தள்ளுகிறது. ஆதலின் அதுவே எருவிடு வாயிலாகும். இந்த வாயைச் சுற்றிலும் சிறு புலனுணர் உருப்புகள் (Tentacles) இருக்கின்றன. இவை மிக உணர்ச்சி வாய்ந்தவை. இவற்றில் ஒன்றைத் தொட்ட உடனேயே இவ்வுயிர், தன் வயிற்றிற்குள் நிறைந்த கடல்நீரை வெளியே கக்கிவிட்டு உடலைச் சுருக்கிக் கொள்கின்றது. எந்தப் புலனுணர் உறுப்பினைத் தொட்டாலும் இவ்வாறு நிகழ்கின்றது. எனவே, புகுவாயும் இயக்குவாயும் உடல்முழுதும் பரந்து தொடர்புண்டு கிடக்கின்றன என்பதாயிற்று. நரம்புவலையானது அதன் உடல்முழுதும் தசைநார்களோடுதொடர்ந்திருக்கிறது.

இந்தச் சந்துவிற்குப் புகுவாயும் இயக்குவாயும் அமைந்தமைபோலப் பொருத்துவாயாம் நடுவிட நரம்பமைப்பும் உண்டோ என்பதே கேள்வி. பொருத்துவாய் இல்லை என்பதே துணிபு. வட்டவடிவினதாகிய அடிப்புறத்திலுள்ள தசைநாரின் அசைவினால்தான் அது நகர்ந்து செல்கின்றது. மேற்புறமும் அடிப்புறமும் வேறுவேறாகுமாறு குறுக்கே அரிந்துவிட்டால், அப்பொழுதும் அவ்வடிப்புறம் ஒன்றுமறியாது நகர்கிறது. பொருத்துவாய் இல்லாமையால் இங்ஙனம் நிகழ்கின்றது. நமது கால்களை இடுப்பளவில் வெட்டிவிட்டால் அவை தாமே நடந்துசெல்வது போன்றன்றோ ஈது இருக்கின்றது.

வாயைச்சுற்றியுள்ள புலனுறுப்புக்களின் அருகே சிறு தசையை வைத்தால், அவ்வுறுப்பு அத்தசையைச்சுற்றி இறுக்கிக்கொள்கிறது. பின்னர் வாய் எந்தப்புறம் இருக்கின்றதோ அந்தப்புறமாக வளைந்து



அத் தசையை வாயில் இடுகின்றது இவ்வுறுப்பில் ஒன்றைத் தனியே அறுத்து வெளியில்எடுத்து அதன் இடையே தசையை வைத்தால், அவ்வுறுப்பு அப்பொழுதும் தசையைச் சுற்றிவளைத்துப் பிடிக்கிறது; தனக்கு எந்தப்புறத்தில் வாய் இருந்ததோ அந்தப் புறமாக வளைந்து கொடுக்கிறது. வெட்டுண்ட பின்னும் நமதுகையானது சோற்றைப்பிசைந்து வாயருகு கொண்டுவருமென்றால் எப்படியிருக்கும்; அதுபோலன்றோ இது இருக்கிறது. நடுவிட நரம்பமைப்பிருந்தால் இவ்வாறு நடவாதன்றோ.

அதனுடைய வாயின் ஒரு புறமாகவே உணவைத் தரத் தொடங்கித் தசையையும் தசைச்சாறில் ஊறிய துணியையும் கொடுத்துவருவோமானால் சிறிது பொழுதுவரை இரண்டிற்கும் வேற்றுமை யறியாது உட்கொள்ளுகிறது. பின்னர், உண்மையறிந்து தசையை யுட்கொண்டு துணியை வெளியே தள்ளுகிறது. ஆனால் வாயின் குறித்த ஒருபுறமே இதனை அறிகின்றது. மற்றொருபுறத்தே பழையபடி துணியும் தசையும் தந்தால், அந்தப்புறத்திலும் அவ்வுண்மையை அறியும்வரை சிறிதுபொழுது இரண்டிற்கும் வேற்றுமை காணாது உட்கொள்ளுகின்றது. நடுவிடத்து நரம்பமைப்பு ஒன்று இருந்தால் வாயின் ஒருபுறம் அறிந்த உண்மையை உடல்முழுதும் உடனே உணருமன்றோ. தீயில் கையை வைத்தால் சுடும் என்ற உண்மையை நமது ஒவ்வொரு விரலையும் தனித்தனித் தீயில் வைத்தபின்தான் உணர்தல் கூடுமானால் நம் நிலைமையும் அதன் நிலைமை போன்றதெனலாம். ஆனால் நமக்கு நடுவிட நரம்பமைப்புண்மையால் ஒருவிரல் அறிந்ததை நடுவிடம் அறிய, அதனின்று உடல்முழுதும் ஒருங்கே அறிகின்றதெனலாம்.

இதனிடத்தே புலன்கள், காது கண் என, வேறுவேறு பிரிந்தமையாது உணர்ச்சியென்ற அளவில் பொதுவாக உடல்முழுதும் பரவி இருக்கிறது. உயிர்கள் உயர்நிலை யடைந்தபோதுதான் இப்புலனுணர்ச்சி, தனித்தனி யுணர்ச்சிகளாகப் பிரிகின்றது. இவ்வுயிரினிடத்தே புலன் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. அதன் புலனைப் புகுவாய் என அழைப்பதே பொருத்தமாகும். இப்புகுவாய் யாதொன்றையும் தெளிவாக அறிவதில்லையன்றோ! வெளிப்பொருள் வந்து தன்னைத் தாக்கலை அறிந்து, தசைநார்களோடு தொடர்புண்டு அவற்றிடத்தே ஓர் இயக்கத்தை உண்டுபண்ணுவதே இப்புகுவாயின் வேலையாகும். எனவே, புகுவாய்நரம்புகள் இயங்குவாய்நரம்புகள் என்ற இரண்டோடேயே கடற்காற்றுமலரான் என்னும் இந்த உயிர்ச்சந்து விளங்குகின்றது. நடுவிட நரம்பமைப்போ, பின்னர் எழுந்த சிக்கலான நிலையில் அகப்பட்ட உயிர்களிடையே தோன்றி வளர்வதாகும்.

## நம்மாழ்வார் விபவம்.

"திருவிருத்தம்" ஆராய்ச்சி.

871வது பக்கத் தொடர்ச்சி.

இவ்வாழ்வார் நான்கு கிரந்தங்களை இயற்றினதின் முன்பேயே தன் துணிவு, வேதாந்தஞானம், சித்தாந்தங்கள், இவைகளில் தேற்றமும் நிச்சய ஞானமும் உடைத்தாயிருந்தார். முன்னுள்ள பிரபந்தங்களின் கருத்துத் தோற்றங்களே பின்னுள்ள நூல்களிலும் காண்கின்றன. உதாரணமாக, முதல் கிரந்தமாகிய "திருவிருத்தத்தில்" உள்ள ஒவ்வொரு பாசுரத்துக்கும் நேராக அதே பொருளுள்ள பாசுரங்கள் கடைசிபிரபந்தமான திருவாய்மொழியில் காணலாம். இவர் "திருவிருத்தம்", துறை திணைகளை யனுசரித்ததேனும், மற்றக் கோவைகளிலும் இறையனார் அகப்பொருளிலு முள்ள முறையிற் பிறழ்ந்தும் அநேக துறைகளை ஒழித்துஞ், சிலவற்றைமாத்திரம் உபயோகப்படுத்தியும், பாடப்பெற் றிருப்பதாய்க் காண்கிறது. இதற்குக் காரணம், தமிழ் இலக்கியங்கள், பழைய கோவைநிபந்தனையும் அகப்பொருள்வரலாற்றையும் விட்டுவிலகிப் பின்னுள்ள "சீவக சிந்தாமணி" போன்ற மரபில் தொடங்க யத்தனித்ததே யாகும். துறைகளும் திணைகளும், தத்தம் வரையறுப்பு வழியோடன்றிப் புலவர்கள் கால்நீட்டி உலவவும், தம்முள்ளத்தில்எழுந்து வாய்ந்தகல்பனை உய்த்தபடி பாடவும் எப்படி இடம் கொடுக்கும்? ஒரு உதாரணமாக, திருவிருத்தம் 22-வது செய்யுளை எடுத்துக்காட்டுவோம். இயற்கைப்புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் நிகழ்ந்தபின், தலைமகன் தோழியைத் தனியேகண்டு, தான் சேர்தலின்பொருட்டு அமைந்த கருத்துள்ளவனை னையும் வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பாகக் கூறும் துறையில் அது பாடப்பெற்றிருக்கிறது. தலைமகன் திருமாலே என்பது யாவரும் அறிவர். தலைமகளும் தோழியும் தினைப்புனம்காத்து நின்றவிடத்துத் தலைவி குறிஞ்சிநிலத்துக் குரியவளாதலின், இவளைக் காண வருவார் தழையும் கண்ணியும் கையுறையாகக் கொண்டுவரும் முறைப்படி வந்தானானாலும், வந்தவத் தலைவன் உடனே வரைந்துகொள்ள உடன்படாமை பற்றி இகழ்ந்து தலைவி தோழிக்குக் கூறிய பாசுரம்.

"கொம்பார் தழைகை சிறுநாண்
எறிவிலம் வேட்டைகொண்டாட்
டம்பார் களிறு வினவுவ
தையர்புள் ளுருங்கள்வர்
தம்பா ரகத்தென்று மாடாதன
தம்மிற் கூடாதன
வம்பார் வினைச்சொல்ல வோவெம்மை
வைத்ததிவ் வான்புனத்தே."

இதன்பொருள்:—"இப்பெரியவரின் கையுள்ளது தழை ஆர்ந்த கொம்பு. இவர் வில்லின் நாண் ஒலி ஒரு வரும் கேட்டிலம். கையில் நாண் எரிந்த வடுவும் காணோம். இவர் உத்ஸாகமோ வேட்டை. இவர் நம்மைக் கேட்பதுவோ, அம்புபட்டு ஓடும் யானை இங்கே வந்ததா, என்பது. திருமாலினது இவ்வுலகத்தில் எக்காலத்திலும் நடவாதனவும் தமக்குள் ஒன்றோடு ஒன்று பொருந்தாதனவுமான புதுமை மிகுந்ததிவர் கேள்வி இது. இவரது வம்பு வார்த்தைக்குப் பதிலளிக்கவோ முதுகுருவர் நம்மை இவ்விடத்தில் அமைத்தார்கள்?"

இதே உல்லேகம் இன்னும் 5, 6 கோவைகளில் காண்கின்றது. ஆயினும் அவைகளெல்லாம் ஒவ்வோர்

புலவர்களிடத்தில் விசேஷமனோதர்மத்தை வெவ்வேறு பெற்றுப் படிப்பவர்களுக்குச் சுவை வேறுபாட்டைத் தருவனவல்ல (They all bear a family likeness) ஒருகோவையில் காண்பனவே மற்றக்கோவைகளிலும் சற்றும்வேறுபாடில்லாமல் நிகழ்கின்றன. இது, தமிழ் அநாதியாய் வரும் பழைய கோட்பாடுகளை விடாம லனுசரித்துத் தனக்குத்தானே விலங்கிட்டுக் கொண் டமைபற்றி நேர்வதாகும்.

(1) பண்ணுற்ற தேன்மொழிப் பாவைநல்
வீரோர் பகழிமூழ்கப்
புண்ணுற்ற மாவொன்று போந்ததுண்
டோநும் புனத்தயலே.

(2) மண்பட்ட கோடும் மதம்பட்ட
வாயும் வடிக்கணைதோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த
தோவோர் போர்க்களிறே.

(3) "பித்தினர் போலப் பலதொடுத்
தார்பிறங் கெக்கலைக்கும்
வித்தினர் போல விடையும்
விடுத்தனர் மெய்மையுளம்
பொத்தினர் போல உரைக்கொத்த
வில்லின ரல்லர்பொற்பூங்
கொத்தினர் யாவர்கொல் சேயரு
மல்லார் குறிப்பினரே.

4 அம்பிகாபதிக்கோவை 92-ம் பாசுரத்திலுமிக் கருத்து உள்ளது காண்க. இன்னபடி மற்றநூல்களில் வரும் பாசுரங்கள் ஒருவிதமாயிருக்க, 'இவ்வாழ்வாரின் பாசுரத்திலேயே தலைவியின் கோபத்தால் வாக்கு பௌரஷமும் சேராச்சேர்த்தியால் வரும் ஹாஸியரசமும் சிறப்புவாய்ந்து விளங்குகின்றன.

இதுபோலவே திருவிருத்தம் 57-வது பாசுரத்தையும் மற்றக் கோவைகளிலும் கிடைப்பதையும் கூறுவோம். துறை, தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்-செய்யுள்:—

புலக்குண் டலப்புண் டரீகத்த
போர்க்கெண்டை வல்லியொன்றால்
விலக்குண் டுலாகின்று வேல்விழிக்
கின்றன கண்ணன்கையான்
மலக்குண் டமுதம் சுரந்த
மறிகடல் போன்றவற்றால்
கலக்குண்ட நான்றுகண் டாரெம்மை
யாரும் கழறலரே.

இரண்டு கண்களும் தம்மில் ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்செய்கிற இரண்டு கெண்டைமீன்களை ஒத்தன. அவை வல்லி ஒன்றால் விலக்கப்பட்டுலாவுகின்றன. தனித்தனி சீற்றத்தோடு வேல்போலக் குத்தி வருத்துவனவாய்நோக்குகின்றன.நான் அக்கண்களால் அமுதமதன காலத்தில் கடல் கலக்குண்டதுபோல் கலக்கப்பட்டபொழுது, பாங்கனே! என்னைக்கண்டார் "ஒருத்தியின் கண்பார்வையிலேயோ அகப்பட்டு இவ்வண்ணம் கலங்கினாய்" என்று இடித்துக்கூறார்.

மற்றக் கோவைகள் "காணிற் கழறில்லை கண்டிலை மென்தோள் கரும்பினையே", "மேலானவரும் கண்டார் உரையார் இந்த வீரங்களே', "வண்டார்குழல் மடமங்கை மதர்வை மென்னோக்க மென்பொற் கண்டார் உளரே லுரையார் பிறவின்ன கட்டுரையே." எனவரும். இவைகளில் வர்ணனையும் சிறப்பும் வாய்ந்தது இவ்வாழ்வார் கவியே. "திருவிருத்தம்" என்ற பெயர் "விருத்தம்" "செய்யுள்" என்ற பொருள் கொள்ளக்கூடும். இப்பிரபந்தம் தன் "செய்தி" யெல்லாம் திருமாலுக்குமுன் நின்றுரைப்பதாகக் "கேட்டருளாய் நான் செய்யும் விண்ணப்பமே" என்று இவ்வாழ்வார் முதற்பாசுரத்திலேயே கூறியுளார். இது கோவைப்போலியென்றே அறிவுடையவர் உரைப்பர். இந்த 100 செய்யுள்களில் அற்புதமான ரத்னங்கள் ஆங்காங்குக் கிடப்பவைகளில் நாலைந்தை எடுத்துக் கூறுவோம்.

இறையோ விரக்கினு மீங்கோர்பெண்
பாலென வும்மிறங்கா
தறையோ வெனநின் றதிருங்
கருங்கட லீங்கிவள்தன்
நிறையோ வினியுன் திருவரு
ளாலன்றிக் காப்பரிதால்
முறையோ வரவணை மேல்பள்ளி
கொண்ட முகில்வண்ணனே.

இந்த 62 வது பாசுரம் தலைவின் ஆற்றாமையைத் தோழி தலைவனைநோக்கிக் கூறல். "எவ்வளவு நாங்கள் வேண்டிக்கொண்டாலும், இவள் ஒரு பேதையென்று மனமிரங்காது கருங்கடல், அறைகூறுவதுபோல் நின்று அதிரும். ஈங்கு இவள்தன் நிறையோ நாணைச் சிதைக்காதோ. பாங்கியாகிய நானும் இதுவரை ஒருவாறு ஆற்றிவைத்திருந்தேன். தன்னைத்தான் ஆற்றிக் கொள்ளவல்லவளல்லள்.உன் திருவருளாலன்றிக்காப்பதுதான் முறையோ? உமக்குத் தகுமோ?" என்பது இதன் பொருள். இனி ஒரு அற்புத ரத்னத்தை ஓதினின்றும் தேடிஎடுத்துரைப்போம். அதாவது 60வது பாசுரம். தலைமகள் இளமைக்கும் அறியாக் காலத்துள்ளே அவளுக்கு ஏற்பட்ட ஈடுபாடும் ஆசையும் தகாது என்று செவிலித்தாய் இரங்கல். இவளது விஸ்மயம்அறுவகைக்குறிப்புகளால்நிர்த்தேசிக்கிறாள். (1) "முலையோ முழு முற்றும் போந்தில" (2)மொய் பூங்குழல் குறிய (3) கலையோ அரையில்லை (கலை உடுத்த அறியாள்) (4) நாவோகுழறும் (5) கடல்மண்ணெல்லாம் விலையோவென மிளிரும் கண் இவள் பரமே (6) பெருமான் மலையோதிருவேங்கடம் என்று கற்கின்ற வாசகமே". இவ்வாழ்வார் இப்பிரபந்தத்தில் துறை திணைகளை யனுசரித்தாரேனும் மற்றவைகளில் இவைகளின் வரையறை கட்டுப்பாடுக்கு உள்ளடங்க வாராமல் அவற்றால் தம்கருத்தை எளிதில் உணர்த்த வாய்ந்தவிடத்தில் இவற்றின் துணையைக்கொண்டும் தமிழ்நாட்டு நடைபெற்ற ஆசார மரியாதைகளைக் கொண்டும் தம் குறிப்புகளை விளக்கியுளார். திருவிருத்தத்தில் தம் மனத்தினோடும் திருமாலோடும்பாங்கியோடும் பரஸ்பரம் பேசிப் பின் திருவாய்மொழியில் காணும் ஆழமுள்ள மனநிகழ்ச்சிக்கும் (deep concentration) இக்கிரந்தத்தால் தம்மை பயின்று கொண்டார்போலும். இனித் திருவாசிரியத்தை விமர்சிப்போம்.



189080.

## "திருவாசிரியம்" ஆராய்ச்சி

"காசினியோர் தாம்வாழக் கலியுகத்தே வந்துதித்து
ஆசரியப் பாவதனால் அருமறைநூல் விரித்தானை
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்து
[துமே"

என்றார் ஸ்ரீ ராமாநுஜமுனி என்ற பிரதம வைணவாசிரியர். இது யஜுர்வேத சாரமென்பர். இதிலிரண்டாவது பாசுரத்தில் திருவோடு மருவிய பகவானைச் சார்ந்து பூஜை அடிமை செய்யவேண்டுமென்ற "அவா" "ஆருயிர் உருகி" எழும் அன்பும் இன்பும் கலந்த தேனென்றும் (தேறல்), அந்த அமிர்தம் போன்ற வெள்ளத்தில் குடைந்தாடுவதையே யன்றி மூன்று லோகாதிபத்தியத்தையும் வானாட்டையும் "தெள்ளியோர் குறிப்பு" மதியாதென்றும், "எந்தை அறைகழல் சுடர் பூந்தாமரைசூடுதற்கே" நாடு'மென்றும் சித்தாந்த முரைக்கிறார். மூன்றாவது பாசுரத்தில் "தனிமாத் தெய்வத் தடியவர்க்கினி நாம் ஆளாகவே யிசையும்கொல்?" என்று பகவத் தாஸியம்போல் பாகவத தாஸியரசம் அபேக்ஷிதமென்று கற்பிக்கிறார். நான்காம் செய்யுளில் ஆதி பிரளய காலத்தில் "யாவகை யுலகமும் யாவருமில்லா மேல்வரும் பெரும் பாழ் காலத்து" உலகுகளைச் சராசரங்களகப்பட தன்னுள்ளடக்கி "இரும் பொருளுக்கெல்லாம் அரும்பெறல் தனிவித்து ஒரு தானாகி" பின்னர்ப்பிரமனைத் தன்னுந்தியில் விளைத்து அவனைக்கொண்டு எல்லாம் ஒருங்கே படைப்பித்த மாயக்கடவுள் மாமுதலடியே, வணங்குவோம் மென்கிறார். "நளிர்மதிச் சடையனும் (சிவபெருமானும்) நான்முகக் கடவுளும் முதலா யாவகையுலகமும் யாவருமகப்பட நிலம் நீர் தீ கால் சுடர் இருவிசும்பும் மலர்சுடர் பிறவும்" வெகுசூக்ஷ்ம அவயவிகளாய் உரு அழியாதே "சிறிதுடன் மயங்க ஒருபொருள் புறப்பாடின்றி முழுதும் அகப்படக் கரந்து யுகப்பிரளயத்தில் ஓர் ஆலிலைச் சேர்ந்த வெம்பெருமா மாயன்" சேதநா சேதன விசஷ்டமும் அத்துவைதம். "ஸ்ரீ ஏகோ நாராயண:" என்று வேதம் சாற்றுகிறபடி: அதாவது "ஒருபொருள்" என்று தம் சித்தாந்தத்தை விளக்குகிறார். பிறகு 5-வது பாசுரத்தில் வேதத்தில் புருஷஸூக்த மந்திரத்தில் செப்பிய "ஸஹஸ்ர சீர்ஷா புருஷா ஸஹஸராக்ஷ" என்ற தேஜோ உருவத்தைத் திருவிக்கிரமாவதாரத்தில் அவலம்பித்துக்கொண்டு "தாமரைக்காடு மலர்க்கண்ணொடு கனிவாயுடையதுமாய் இருநூறாயிரம் மலர்ந்தன்ன கற்பகக்காவு பலபலவென்ன முடிதோளாயிரம் தழைத்த நெடியோய்" என்று வர்ணிக்கிறார். 6-வது பாசுரத்தில் "முதற்பெருங் கடவுள் நிற்ப" ஏனைய தெய்வங்களை வழிபட்டுப் பேணுதல் "இன்பு துன்பு அளிதொல் மாமாயப் பிறவியுள் நீங்காது அழுத்துமென்று அவரவர்களுக்கு வற்புறுத்துகிறார்.இதுவரையில் இவ்வாசிரியத்தின் முதற்பாட்டைப் பற்றி சொன்னோமல்லோம்.இவ்வாழ்வார் தாமே பரவாசுதேவன் வீற்றிருக்கும் திருக்கோலத்தை 8-ம்பத்து ஐந்தாம் திருவாய்மொழி "மாயக்கூத்தா" என்கிற தசகத்தில் தம் கண்களால் காணக்கருதி அவன் தோற்றாமையால் அவன் ஸ்வரூபத்தை ஒருவாறு வர்ணிக்கத் துடங்கி அவர் திருவுள்ளம்கொண்டும் திருவாக்குக் கொண்டும் "சொல்லமாட்டேன்" என்று உறையும் வண்ணம் அத்திருவுருவின் ஜோதி இலங்கிநின்றால், எம்மால் அவர் கூறியபாசுரத்தை எவ்வாறு உணர்தகக் கூடும். ஆனாலும் கூறாதுவிடாமல் ஒருவாறு முயல்வோம். ஆழ்வார்தான் எப்படி வர்ணித்தார்? மூர்த்திமானாயுள்ள விக்கிரக விசேஷத்தில் திருவடிகளாகிற மலர் போதுகளே பக்தர்கள் இழியும்துறை. வைணவர்களுக்கு இவைகளே அக்கரையில் சேரும் துறை. அவர்கள் திருவடிகளே பிராப்பிய பிராபகங்களென்பர். இவைகளை முற்பட "மாயகூத்தாவில்" எங்ஙனம் இம்மஹான் அநுபவித்துளார் என்பது கருதத்தக்கது. 'சோதி திருப்பாதம்இளநாயிறிரண்டு போல் தம்மகக் கண்ணிலுள்ளனவா" என்றும் அவைகளின் தேஜஸும் ஸௌந்தரியமும் வர்ணிக்க முடியவில்லையாயினும் மறக்க முடியவில்லை, என்று கூறுகிறார். அடுத்த பாசுரத்தில் உன் கழல்களைக் காட்டு என்றழைக்கிறார். அடுத்த பாட்டில் "தண்பாதங்கள்" தனக்குத் தண்ணளி தந்தமையை அருளிச்செய்கிறார். இதுஇப்படியிருக்க,திருவாசிரியத்தில் "மூவுலகளந்த சேவடியாய்" என்று, உலகளந்த சிரமத்தால் சிவந்ததோ என்று பரிதபிக்கிறார். இதர அவயவங்களின் அழகுகள் இவரைக்கவர்ந்துகொள்ளவே திருவடிகளில் ஈடுபாடு குறைந்ததுபோலும்! இதுபோலவே மற்றஅவயவசோபையை 'மாயக்கூத்தா' தசகத்தில் தம் திருவுள்ளத்தில்தோன்றியபிரதிபிம்பங்களைத் தீர்மானமாகவும் தேர்ச்சியாகவும் உன்னிப் பிடித்து அத்தோற்றங்களை அவர்திருவாக்கால் நமக்கு அளிக்கிறார். இது முன்தசகத்தில் இவ்வவயவ அழகுகளைத் தாமரைக் காடு பூத்தாற்போல் என்று வர்ணித்துமுளார் "கண்கள் சிவந்து" என்கிறதசகத்திலும் அந்தத் தேஜோமய ஸ்வரூபத்தை வெகு திறமாகவே (Photo sensitive plate உருவத்தைக் கிரஹிப்பதுபோல்) தம் திருவுள்ளத்தில் தாங்கி வாங்கி அந்த நகல்களுக்குத் தன் சாயையை ஒருங்கேஅறிவிப்பதுபோலத் தம்திருவாக்கால் நமக்கு அருளிச் செய்கிறார். என்றாலும் இத் திருவாசரியத்தில் முதற்பாசுரத்தில் வர்ணித்துள்ள திவ்விய விக்கரகம் எமக்கு மனதில் ஒருவாறு தோய்ந்ததுபோல் தோன்றினாலும், நிலைபெற்று அமர்ந்து எம் உள்ளத்தில் கவர்ந்து கிடப்பதென்று சொல்லத் துணியோம். ஆழ்வாருக்குத்தோற்றியிலங்கியது அவர் அகக்கண்ணில் தோற்றத்திற்கே ஒரு வழிபட்டு நில்லாமல் ஒரு க்ஷணத்திலேயே திருப்பவளம்செங்கனிவாய் பீதவாடை பல அணிகலன்களின் ஒளி இவைகள் அங்குமிங்கும் இழுக்கப்பட்டால்ஏபாவம்!நம்பரமோ? எம்சிற்றறிவு அவற்றைஎல்லாம்ஏற்றுத் தரித்துஉணர்த்த எத்தனித்தால் அலைபாயுமல்லால் நிலைநிறுத்தி அனுபவிக்க வல்லதோ? அதிலும் ஆழ்வார் திருவுள்ளத்தில் எழுந்த இந்த மனப்படம் விசித்திர விவர்ணமாக அமைந்துள்ளது (The colour scheme is intriguing and difficult to conceive). க்ஷீராப்தி கீழில் வெள்ளையான பால் நிறம் தூரத்திலும் ஆகாயத்திலும் வெளிவாய்நின்றும்அலைத்திவலைகள்வீசும்வெள்ளைச் சுடராகவே யிலங்கும். இதுசித்திரத்திற்குப் பின் அடைவு (Back ground). சுற்று நின்றும் ஓங்கும் பொருள்கள் கைதொழும் தேவர்குழாங்கள் அடுத்துப் பின் நிற்பதும் சூழவிருப்பதும் ஆயிரம் சிரசுகளும்

இரண்டாயிரம் மாணிக்கங்களாக இலங்கும் ஆதி
சேஷனும் அவர் கண்களும் இவர் ஆயிரம் தலைகளும்
சுவர்ணக் குன்றுகள். அவனோடு வீற்றிருப்பவளோ
அவனே வியந்து வாரி எடுத்தணைத்த திருமகள். இவ
ளின் சோவையே வேறிடத்துள்ள நோக்கை எல்லாம்
அவித்துத் தன்னிடத்திலேயே அமைத்துக்கொள்ளும்.
வாரிக்கொள் என்ன அமைந்திருக்கும் வடிவழகு
எத்திசையும் கவரிவீசும் ஜ்வாலாபிரபையைச் சக்கரா
யுதம் மகாபாரதத்தில் ஸூரியனை மறைத்து ஜயத்
திருதன் வதத்தைமுடிக்க ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு
உதவிக்கருவியாகி ஆயிரசூரியன் பிரகாசிப்பதுபோல்
தேஜஸுதாங்கி வலப்பக்கத்தில் தீப்தமாய் விளங்கின
னென்றால் மஹாபுருஷனாகிய திருமாலையும்கூட ஸூரி
யனுக்குச் சாயாதேவிபோல் கூடத்தொடரும் நிழல்
அவித்திவிடும். ஆனால் திருமால் இவர் கண்ணுக்கு
மரகதக் குன்றாகவன்றோ விளங்கினார். இடதுபக்
கத்தினின்றும் இலங்கும் சங்கு வெண்மதிபோல் மேல்
இச்சாயை விலக்கக் கிரீடமும் ஆதிசேஷன் பணாக
லாபங்களும் மஹாவிஷ்ணுவின்நீலச்சோபை எங்கும்
கரியமேகத்தைப் பேதித்து, ஒவ்வொரு இடைச்சந்தி
லும் சூரியன் உதித்தாற்போல ஒளி பசபசப்பாயும்
தீப்தமாயும் விளங்கின. அரையில் செக்கர்பட்டும்
மேலில் பீதாம்பரமும் அற்புதமான திருவுடம்பில்
கலந்து தம் தம் சாயையும் வீசின. "பல சுடர்
புனைந்த செவ்வாய்" ஜோதிவாயோடும் சிவப்பக் கண்க
ளும் ஆழ்வாரின் திருவுள்ளத்தை நிறையக் கவர்ந்து
நின்றால் அம்மஹான் ஒருமுறைக்கு இருமுறையாக
அப்பவளச் செவ்வாய் எடுத்துரைக்காமல்விட இய
லுமோ? அருந்தவப்பயனாய் இக்காட்சியை அகக்கண்
கொண்டனுபவித்த மஹானுக்கு மிகைபடக் கூறல்
ஒரு குற்றமோ? வைணவர்கள் தினகாலமாகச் செய்து
வரும் பூஜையில் தர்மாதி பீடமும் உபரிகமலமும்
அதில் திருமகளோடு வீற்றிருக்கும் திருமாலுக்கு
பரிசரியர்களோடு சிங்காசன மமைத்துப் பூஜைத்
தொண்டேற்று வழிபடுகிறார்கள். இவ்வாழ்வார் இத்
திருவாசிரியம் திருவாய்மலரு முன்னமேயே தன்
மனோதர்மங்கொண்டு பிறருக்கு ஏலாத எவ்விதத்
திவ்விய காட்சியையும் அமைத்துத் தம்முள்ளத்தில்
தாங்கி அதைப் பிறருக்குரைக்கவும் சக்தியுள்ளவரா
யிருந்தாரென்று யாம் துணிந்து கூறுவோம்.

# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்.

### சூதுபோர்ச் சருக்கம்.

**ம**லர்தலையுலகத்து மன்னுயிர்க்கெல்லாங் கேடுகள்
விளைவிப்பன வகக் குற்றமாறுமே. அவற்றுள்
ளுந் தலையாய்நிற்பவை காமமு மழுக்
காறும். உலகந் தோன்றியநா டொ
ட்டு மானிடர்க்குறுந் துன்பங்கட்
குத் தலைக்காரணமாய் நிற்பவர் மா

867-வதுபக்கத் தொடர்ச்சி.

தரே யென்று தாகரே (Thackeray) யென்னு
மாங்கில வாசிரியர் கூறுவர். உயரிய மாடத்தின்கண்
ணின்று சித்திரந்தீட்டுமொருவன் கீழ்வீழ்ந் திறந்த
தற்குக் காரணமென்னவென் றாராயப்புகின், அன்
னான் வீதியிற் செல்லும் வனிதையொருத்தியின்
வனப்பை நோக்கி நின்று, மெய்ம்மறந் திருந்து பின்
கால்தவறி வெளியிடத்தை மிதித்துப்பார்மடந்தையை
மார்புறப் புல்லினனென் றேற்படும். இராவண னுள்
ளிட்ட வரக்க ரிறந்ததற்குக் காரணமு மாதொருத்
திமே லேற்பட்ட விழைவேயாயிற்று. இது நாகரிகங்
குறைவுபட்ட முற்காலத்தில்மட்டு மன்றிச் சீர்திருத்
தங்கட் செறிந்த விந்நாட்களிலு முண்மையாய் நிற்
கிறது.

இராமாயண மவ்வாறாக, பாரதப் போரிற்குங்
கௌரவ ரழிவிற்கு மூலமாயது அழுக்காறாகும். துரு
பதனாட்டிற் கண்டகாட்சி துரியோதனன் மனத்தி
லாழ்ந்திருக்குமெனினு மெழில்கொண்ட மாதினாற்
போரெழுந்த தென்பதற்கில்லை. பின்னாள் பைந்தொடி
யைக் கொண்டுபோய்த் தன் மடியின்மீ திருத்தத் துரி
யோதனன் பணித்தனனேனு மவ்வமய மவ்வாணை
கோபத்தாற் பிறந்ததேயன்றி, ஆர்வத்தா லுண்டாயது
என்று கொள்வதற் கிடமில்லை.

இதுவரை யிளைஞரா யிருந்தவ ரிராசசூயத்தின்
பின்னர்த் தத்தந்தொழிலிற் கருத்தினை யூன்றப்
பெற்று, ஒருயர் பதவியி னிலைத்தவராய்த், தம்மைச்
சுற்றிக் கண்செலுத்தித் தந்நிலை யாதென வினவத்
தொடங்கினர். இதுகாறுந் துரியோதனன் வீமனுக்
கிழைத்த தீங்குகளெல்லாம் பிள்ளைச்சேட்டையாய்
முடிந்தன. சூதுபோர்முதற்கொண்டே தலைவர்களது
இயற்கைக்குணங்கள் வெளியாகத்தொடங்கின. இந்
திரப்பிரத்த நகரியி னியற்கையழகும், அதன் செல்வ
மும் வளனும் யாகத்தைமுன்னிட்டுத் தருமனது
தம்பிய ரடைந்த வெற்றியும், அதனு லேற்பட்ட புகழு
மாக்கமும், யாகம் நடைபெற்றபோ தங்குக்கூடிய
வரசர்திரளு மன்னர் பணிவும், கர்ண துரியோதன
ருள்ளத்தைச் சென்று தாக்கின. உலகின்கணென்
றும், ஒருவருக்கு நன்மையாய் நிற்ப தின்னொருவருக்
குத் தீங்காய் முடிகிறது; ஒருவர் தாழவேதா னின்
னொருவ ருயர்கின்றனர். பெருநிதி படைத்துநிற்கும்
வாணிக னெத்தனை மன்பதைகளை வருத்தி மடித்துத்
தன்பொருளை யீட்டுகின்றான்.

தருமன துயர்ச்சியையுந் தமது வளர்ச்சி யின்மை
யையு முன்னினவராய்த் துரியோதனன் கூட்டத்தா
ரத்தினபுரியைச் சென்றடைந்தனர். சென்றதும் மன
திடைநின்ற வெண்ணங்கள் வாய்வழி வெளிவந்தன.
அரச சபையில் அவரவர் தத்த மெண்ணங்களை எடுத்
தோதத் தலைப்பட்டனர். கீழோரனைவரு மொரேவழி
யெண்ணுவ தரிதாயினு மவ்வழி, பிறரைப் புண்
படுத்துவதாயின், அது யாவருக்கு மொப்பமுடிந்த
தாகும். இங்கு, அனைவருந் தருமன்முதலானோரை
யடக்குவ தெப்படியெனச் சிந்தித்தார்கள். துரியோ
தனனுக்கு மவ்வெண்ணந் தோன்றியதேனும், முதன்
முதலிலவன் வாய்விட்டொன்றும் புகன்றிலன். அப்
படி வாய்விட் டாற்றியவன் கன்னனே. ஊன்றி
நிலைத்த வறிவில்லாதவர்கள், பிறரெவரேனு மொன்



றைச் சொல்லித்துவக்கின லதன்பி னவ்வழியைப்
பின்பற்றி விடாது பேசுவ தியல்பு. அவ்வண்ணமே
கன்னன் பேசியபின் துரியோதனனும், பாண்டவரை
விறலாலேனும் விரகாலேனும் வெல்லாவிடின், அவ
ரனைவரும் யாவரையும் மீறிவிடுவார்களென் றுரைத்
தான். மானிடர்க்கெல்லாம் நற்குணமுந் துர்க்குண
மு மியற்கையிலேயே யுண்டு. அக்குணங்கள் வயதேற
வேற உடம்போடு மூத்து முதிரும். அச்சமயம் அம்
மானிடனைச் சுற்றியிருப்பவர் குணங்களுக் கேற்ற
வாறு நன்னடக்கையும் பொல்லாங்கும் வளரும்.
துரியோதனன், இயற்கையில் நற்குணங்கள் வாய்ந்தவ
னென்பது, பேர்ஊர் தெரியாக்கன்னனுக் கடைக்கலங்
கொடுத்து அவனை யங்க தேசாதிபதி யாக்கினதா
லேயே நன்குவிளங்கும். பின்னிட்டும், கன்னனோடு
கவறாடிய தன் மனைவியின் மேகலையை அவன்
பற்றி யிழுத்ததால் அற்றுச் சிதறிய மணிகளைத்
தான் கோக்கவோ வென்று அவ்வியமின்றிக் கேட்ட
தாலு மவனுண்மைக் குணங்கள் வெளியாகும்.
தன்னை யண்டினாரிடத் தவனுக்கிருந்த உள்ளன்
பும், அவரிட மவன்கொண்டிருந்த முழு நம்பிக்
கையும், அவன் மனதிற் கள்ளங்கபட மற்றவனென்
பதைக் குறிக்கும். அவ்வாறு வெளுத்த நெஞ்சினன்
நமக்குத் தீயனாய்த் தோன்றுவ தெங்ஙனம்? மலை
யின்வீ ழருவிகள் தொடக்கத்திற் பனி நீரேயாய்
அப்பனியைப்போன்ற மாசற்ற நன்னீராயிருப்பினும்,
அவை செல்லும்நிலத்தினி யல்பிற்கேற்பக் கறுத்தும்
சிவந்தும்,வண்டல் கொண்டும் பாய்வதேபோல், இவ
னியற்கையுஞ் சிற்றினத்தாற் சிதறுண்டது. இவ
னைச் சேர்ந்தோரெல்லாம், வீடுமன், துரோணன்,
விதுரன் முதலிய சான்றோராயிற்றே யெனின், அவர்
யாவரு மவனை யடுத்தவரா யவன்வண்மையை யெதிர்
பார்த்து நின்றவர். ஆதலா லவர்களிடத் தவனுக்கு
நன்மதிப்பிருக்க வேதுவில்லை. சொந்த மாமனாகிய
சகுனியையே பற்றுக்கோடாய்க் கொண்டன னவ்
வந்தகன்மகனும். கர்ணன் பிறப்பினு லுயரிய குணங்க
ளுடையவனா யிருந்தும், சகுனியோ டுறவாடியதா
லும், அவனுக்குகந்த துரியோதனனாகிய தன் னன்ன
தாதாவிற் கிச்சகம் பேசவேண்டி நேர்ந்த விடர்ப்பாட்
டாலும், தீய மேற்றோலை நீக்குந் தகவிலனாயினான்.
அவன் தீக்குணமுந் தோலளவேயாம். அஃதவ னுடம்
பி லூறிற்றிலது. இத்திமை தன்னைப் பற்றாவண்ண
மோ வவன் கொடையிற்சிறந்தவ னாயது ?

நமக்கொத்தவரும் நம்மிற்றாழ்ந்தாருஞ் சரேலெனச்
செல்வமும் செல்வாக்கும்பெற் றுலகில் நம்மைவிட
உயர்ந்தோரென்றெண்ணப்படின்,நாம் எவ்வளவுதான்
கற்றறிந்த பெரியோராயினும் நமக்கு மனதி லொரு
வகைக் குழப்பமுண்டாவ தியல்பு. அச்சமயம் நமது
உண்மையறிவுகொண் டவ்வெண்ணத்தையடக்கியாள்
வதேமுறை.அது செய்வதற்குத்தான் கல்விவேண்டும்.
துரியோதனன் கற்றுணர்ந் தடங்காதவ னாதலால்
அவனியற்கைச் சீரியகுணங்கள் சிறப்பெய்தவில்லை.
நல்லதொரு பயிரை முட்கள் செறிந்து கெடுத்தல்
போல், களையப்படாத கசட்டுக் குணங்க ளவனைக்
கெடுத்தன. பொறாமை தூண்டவே பாண்டவர்களை
வெல்லவேண்டுமென் றெண்ணினான். எண்ணியவன்
முதலில் நினைத்தவண்ணம் போர்புரிந்து நாடு முத
லியவற்றைக் கவர்த்திருப்பி னவனைப் பெரிதும் நாம்
வெறுக்கமாட்டோம். அப்போ தவன் கண்ணியவழி
யிற் றன் னெண்ணத்தை முடித்தவனென் றவனைக்
கொண்டாட வேண்டியிருக்கும். அதைவிட்டுச் சகுனி
சொற்படி வஞ்சனையாற் சூதில்வென்றதே அவனைப்
பின்னு மிழிந்தோ னாக்கிவிட்டது. அதனாற் பாண்டவ
ரிடத்தும் நமக் கிரக்க முண்டாய்விட்டது. மனித
னுக் கியற்கையாயுள்ள தாழ்ந்த குணங்களை விலைகூறி
வாணிகஞ் செய்தானே யென்ற வெகுளியே நமக்கு
மேலிடுகிறது. தாழ்ந்த குணத்தை மேலாக்கி முதன்
மைப் படுத்தியதால் தருமனும் நமது மதிப்பிற் றாழ்
வடைகிறான். சீரிய தன்மையானை யவ்வாறு சிறு
மைப் படுத்தியதாலும் நமக்குத் துரியோதனன்மே
லொருவாறு வெறுப் பேற்படுகிறது.

இவனறியாமைக் கிரங்கி இவனுக்கு நற்புத்தி யூட்
டத் துணிவுகொண்டு முன்வந்த விதுரனையு மவன்
பாம்பெனச் சீறினான். பொறாமை யுடையவர்க்கு
வெகுளி தோன்றுவ தியல்பு. ஓர் குற்றத்தைத் தன்
னுடம்பினுட் புகுத்திப் பலகுற்றங்களுக் கதனைப்
புகலிடமாக்கினான். குணமென்னுங் குன்றேறுபவ
ரொருமுறை மலைச்சரிவிற் கால்வைத்துச் சறுக்குவ
ரேல், விரைவில் மலையடிவாரத்தை யடைவர். ஆண்
மையும் மெய்வலியும் போர்த்திறமும் படைத்த துரி
யோதனன், கொடையு மிரக்கமும் குடிகொண்ட வள்
ளல், தன்னினத்தார் குற்றங்களையெல்லாம் பொறு
த்த வருக்காகப் பரிந்து வாதிக்கும் பெருந்தகையன்,
ஒளவியமேற்று அரசை யிழந்து நிரயத்துக் குடிபுகுந்
து தன்தோழர் பலரையு மாங்கே நிரப்பிநின்றான்.

தன்மருமகனைத் தெருட்ட முன்வந்துஅவனுக்குத்
தீங்கிழைத்த சகுனியை யென்சொல்வது ? ஷேக்பிய
ரெழுதும் நாடகங்களிலுள்ள துன்மார்க்கரைப்போல்
தங்கள் மனத்திற் குடிகொண்டுள்ள தனி யெண்ணங்
களை முடித்துக்கொள்வான் வேண்டிப் பல சூழ்ச்சி
களைச் செய்து, நண்பர்களது குற்றங்களைத்தெரிந்து,
அவைகளுக்கேற்பக் காரணங்களைக் கற்பித்து, அவ்
விழிகுணங்களைத் தூண்டித்தூண்டித் தங்கள் கருத்
துக்களை நிறைவேற்றிக்கொள்ளும் வஞ்சகரி லொருவ
னல்ல னிவன். இவன் கல்விகேள்விகளாற்றனதறிவை
ப் பெருக்காதவன். ஆயினும், இயற்கையி லொருவித
நுண்ணிய அறிவுள்ளவன். விலங்குகளுக் கிருக்குந்
தன்மையைப்போல், உயிரையு முடம்பையும் பாது
காத்துக்கொள்வதற்கு வேண்டிய, இயற்கையிலமைந்த
தந்திரங்களை தன்னறிவாய் நிரம்பப்பெற்றவன். இவ
னறிவி னாழத்திற்கேற்பத் திரிகரண சுத்தியாய்த் தன்
னுறவினனுக் குதவிபுரிய வெண்ணினானே யன்றி,
இவன் முன்சொன்ன குடிலரைப்போ லடுத்துக்
கெடுக்க முயலவில்லை. சூதுபோர் சம்பந்தப்பட்ட
வரையில் அவனறிவு சிறந்ததெனவே நிரூபிக்கப்பட்
டது.கன்னன், போரிலேயே பாண்டவரை வெல்லவே
ண்டுமென்றபோது சகுனி "இடிம்பன் பகன் சராசந்
தன்முதலியபணைத்தோள்வீரரைவென்றவீமனிருக்க,
வெம்போரில்வெல்வதியலாது;திரௌபதியின்துணைத்
தோள்வேட்டுத் திரண்டு நாம் சென்றநாள் முனியாய்
வந்தவிசயன் வில்லிறுத்தபோது வீரவார்த்தைகளியம்
புங்கன்னனங்கிருக்கவில்லையோ? இப்பிறப்பிலேயன்றி
யெப்பிறவியிலு 'மெய்ப்பிறப்பற்ற' தருமனைப்போரில்
வெல்லமாட்டோம்.ஆகையால் ஏதேனுமோர் சூழ்ச்சி
செய்து வெல்வதே கருமம்" என்றான். அச்சூழ்ச்சியு

மின்னதெனக் கற்பித்துக் காட்டினன். அதனைக்கடை பிடித்தொழுகிய துரியோதனனுஞ் சூதாட்டத்தில் வெற்றியே யடைந்து, நாடுநகரங்களையெல்லாங் கவர்ந்துகொண்டான். சகுனியினறிவா லக்காரியத்திற் கௌரவருக்கு வெற்றியே கிடைத்தது. தருமன் சூதாட வுடன்படானுகித் தருமங்களையெடுத்தோதிய போது, அவனைப் பரிகசவகையாற் கோபமூட்டி யிணங்கச்செய்தவனு மிச்சகுனியே. ஆயினுமச்சமயம் வெற்றியைக் கருதினனேயொழிய, அமைச்சனது தானத்தினின்று, வரும்பொருளுரைத்துத் துரியோதனனைத் தெருட்டத்தவறினன். அதனற்றான் 'சகுனி மாமா' வென்பது துர்ப்போதனையாள னென்னும் பொருளில் வழங்கலாயிற்று.

பொன்னொடு பொலியும் வைரமொன்று, அதனின்றும் பெயர்த்தெடுக்கப்பட்டுத் தகரமொன்றிற்பதிக் கப்பட்டாலெங்ஙன மொளிமழுங்குமோ, அதேபோற் பாண்டவரோடு பொருந்தவேண்டிய கன்னன் கௌரவரோடு சேர்ந்து தன்னொளி மழுங்கினன். அவ்வாறிருந்து மொவ்வோரமயந் தன்னியற்கையொளிஇமைக்க நின்றான். வஞ்சனை வேண்டாவென வற்புறுத்தினன். கொடையைப் பொழுதுபோக்காகக் கொண்டு, அகத்துறையுந் தீக்குணங்களை மாற்றமுயலாமல் 'புறஞ்சுவர்க்கோலஞ்செய்வா''னென்று வில்லியிவனையிழித்துக் கூறுகின்றார். வெளிப்பகட்டிற்கே வள்ளமையைக் கையாண்டதாகப் பாரதத்திற் காட்டப்படவில்லை. இறக்குந்தருவாயிலுந் தலைகாத்துநின்ற புண்ணியமனைத்தையுந் தன்னுதிரத்தால் தத்தஞ் செய்தவனே புறஞ்சுவர்க்கோலஞ் செய்தவன்? தான் பிறப்பினாற் பாண்டவர் தலையனென் றறிந்து, மாளாவன்பி னவனன்னை யவனைப் பாண்டவரோடு சேரென்றபோது, பாண்டவரே வெற்றி பெறுவாரென்று வெளிப்படையாய்த் தோன்றும் பதினேழாம் நாளினுந், தன்னைநம்பித் தனிப்பெரும் பதவியி லுய்த்த துரியோதனனுக்குச் செஞ்சோற்றுக் கடன்கழிக்கத் தன்னுடலை மாய்க்கவேண்டியதே கடமையென வுறுதிகொண்ட பெருந்தகையாளனே வெளிப்பகட்டுக் குழைத்தவன்? இன்னொருவன் செல்வத்தை இறைப்ப தெளிதென்று சொல்லினுமச் செல்வம் பிறனொருவ னுடையதென் றவ னெண்ணவுமில்லை; அவ்வா றெண்ணத் துரியோதனனும் நடந்துகொள்ளவில்லை. நாய்வேடம் போட்டாற் குலைத்தே தீரவேண்டுமென்பர். தான் விதிவலியால் மேற்கொள்ளநேர்ந்த வேடத்திற்கேற்ப வவன் நடிக்கவேண்டியவனயினன். அங்கே யவனுண்மையாளனய் உழைத்தது கொண்டாடத்தக்கது. தன் தந்தையைப்போ லுலகிற் புகழொளி நிறுவி அறிவா லவிரொளி பரப்பவேண்டியவிவன் குந்தியின் குற்றத்தாற் குறைபாடுற்றனன். கூடாவொழுக்கத்தா லுறுங்குற்ற மின்னதென வடநூலார் கன்னன்வழியா லுலகத்தாருக்குக் குறிப்பித்துள்ளார். இச்சருக்கத்திற்குரிய முன்னுரையை முடிப்பதன்முன்னம், விதுர விகர்ணர்களைப் பற்றிச் சிறிது புகல்வோம்.

நல்லொழுக்கமே யணிகலனப் புனைந்த விம்மேலோன் பிறவியாற் சோக்கமடைந்தான். தான வேறுபாட்டாற் றாழ்மையடையு முண்மையை விளக்க வேண்டி விதுரனிக் கதையி லிழுக்கப்பட்டான். வேறு வகையில் பாரதக் கதையில் விதுரன் செய்யும் வேலையொன்றுமில்லை. வில்லை முறித்து வாளா நின்றுவிட்டானதலால், இவன் கதைக்கு இன்றியமையாதவ னல்லன். மிகுதிக்கண் மேற்சென் றிடிக்கு முண்மைநேசனைத் துரியோதனன் பெரிதும் பழித்தான். "நினக் கிதுவேதொழில்; உனக்கு முன்கிளைஞர்க்கு முணவும் வாழ்வு மென்னிடத்தே; உன் அன்புங்கருத்துமோபாண்டவரிடத்தே. இதைநான்நன்கறிவேன்" என்று புண்படப்புகலுகின்றான். இவனுடைய நன்மொழிகளும், காலத்திற் சொன்ன நற்புத்தியும், வேலைவாய்ப் பொழியு மாரிபோற் பயனிலவாயின. துரியோதனனை வெறுத்து வெளிக்கிளம்பப் போதுமான வுறுதிப்பா டிவனிட மில்லை. தனக்கொவ்வாத வேலையாகிய பாண்டவரையழைத்துவரும் தூதையும் வேண்டாவென வொழிக்காமல் மேற்கொண்டான். ஆயினும் துரியோதனனது பகைமையையும்பாராது, பாண்டவர்களிடத் துண்மை யீதென வெளியாக்கித் தன்மெய்த்திறம் விளங்கநின்ற தவனன் னடையை விளக்கிற்று. இவர்களை யழைத்துப்போக வந்தவனதலால், தருமன் என் செய்வதென இவனையே வினவியபோது தன்றொழி லுக்கவதூ றுண்டாகாமல், 'நின்னிதயத்தங்கு நேர்மையின்செய்க'வென மறுமொழிதந்திட்டான். இவனது நற்குணங்களைக் கருவியாக்கிக் கண்ணன் தூதுசென்றபோ தவனைத் தன்வயப்படுத்தினன். இதுவும் அவ னுறுதிப்பாடில்லா மனத்தனென்பதை விளக்குகிறது.

கள்ளிக்காட்டி னடுவண் கற்பகத்தரு முளைத்தது போல், கயவர் நூற்றுவரிடையே விகர்ணன் தோன்றினன். இச்சருக்கத் திலவன் ஒருமுறையே வார்த்தையாடினும், பின்னருமவ்வாறே அபூர்வமாய்த் தோன்றினும், அவன் நமது அன்பைக் கொள்ளையிட்டுவிடுகிறான். திரௌபதியின் தாழ்குழல் தரையிற் புரள அலைத்துவந்து அரசசபையி லேறியவள், மன்னன் 'தன்னைத் தோற்றபி னென்னைத் தோற்றனனே அன்றி யென்னைத்தோற்றுப்பின் தன்னைத் தோற்றனனே, பெரியீருண்மை பேசுகி'' ரென்றிரக்க அனைவரு மோவியம்போ லிருந்தபோது பொறுனப் விகர்ணன் அவர்களை நோக்கி "பொல்லாநெறியி லனைவீரும் போகாவண்ணம் புகல்வீரே'' என்றுறுத்துக் கூறிப் புகழ்படைத்தான். "கண்கண்டதைப் புகலுவதற் குமக்கென்ன வச்சம்? இவ்வளவு திடமில்லாத நீவிர் உயர்குலத்துப் பிறந்தோ ராவ தெங்ஙனம்? தன்னைத்தோற்றுத் திரௌபதியைப் பின்னே தோற்பதற்குத் தருமருக் கேதுரிமையென்று பேசுவீரே! என்று புகன்றதாலேயே யவன் தக்கோனெனக் கொள்ளற்பால னயினன்.

**அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.**

வி. பி. சார்ஜ் வேறு. **கலாநிலயம், வேப்பேரி, சென்னை.**



# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## 19. உலாவியற் படலம்.

**கண்ண னிலக்கணம் யாதென வியம்புவார் கம்பர்.**

874வது பக்கத் தொடர்ச்சி.

திறங்கொள் கோசலைதன் மணிவயிற்றிலோர் மாமகனய் வந்துதித்தா னனாலும், உலகெலா மொருபகல் தன்திரு வுதரத்திற் பொதிந்து அருமறைக் குணர்வரு மவனே, வீதிவா யுலாப்போதரு மிப் பெம்மா னென்னும் வாய்மையை, புந்தியால் பொறியா லறியாரேனும், அவ்வவ ருள்ளுணர்வு உற வுறத் தூண்டலால், மிதிலைவாழ் சுதலைச்சொல் மடவார், நாணம் நிறையனைய தம் பெண்மைக்குரிய அரணங்கள் காத்தற்கியலா ஆர்த்தியுடன், இற்பிறந்தார் மரபொழிந்த மொழியுந் தொழிலும் பற்பலநிகழ்த்தா நின்றன ரென்னற் காதாரமாமாறு கம்பர், மாநில மாந்தர் தெய்வமெனு மத்தத்துவத்தைப் பற்பல விதங்களில் பாராட்டிவரும் வாசகங்களைப் பெய்துபெய்து தம் பாசுரங்களிற் பேசலாயினர். தன்னேரில்லாத் தனிப்பே ரெழிலுடையோ ராகிளங்குரிசி லிவ்விராமனெனும் வெளியுருவத் தோற்றத்தை யுருவிச்சென்று அப்பாலிற் கப்பாலாய வப் பரம்பொருளோ டுறவு கொண்டது, வாழி, அவ்வனிதைய ருணர்வு. இவ்வுணர்வு, உரையால் வெளிப்படற்கு இயலுமளவு ஏனையோர்மாட்டு இயங்காதிருக்க, அப்பெண்களுள்,

வண்ண வாயொரு வாணுதன் மானிடற்
கெண்ணுங் காலிவ் விலக்கண மெய்திட
ஒண்ணு மோவி துணர்த்துகின் றேனிவன்
கண்ண னேயிது கண்டிரும் பின்னென்றாள்.

[அழகிய வாயும் ஒளிபொருந்திய நெற்றியும் உடைய ஒருத்தி, "யோசிக்குமிடத்து, மனிதனொருவனுக்கு இந்த இலக்கணம் பொருந்தியிருக்கக் கூடுமோ! ஆதலின் ஒன்று இப்பொழுது உங்களுக்கு நான் தெரிவிப்பேன்—இவன் கண்ணனே யன்றி வேறுயாரும் அல்லன்—யான் இயம்புவதை அயிர்ப்பீராயின், பிறகு பாருங்கள், அப்பொழுது நிச்சயமாகும்'' என்றாள்]

அமரரு மருந்தவமுனிவரு மங்கா ளறியலாகாவோர் இரகசியத்தை இத்தெரிவை தெரியாக் கூறினாள். முதுமறை துதிசெய, உததியிலு மாரவணையிலு மாலிலையிலுந் துயின்றருளுங் கண்ணனென் றிவள் இராமனை உணர்ந்ததோ டமையாது, இனி மற்றோருகத்தில் ஆயர்பாடியில் அசோதையின் திருக்காங்களில் கண்வளருங் கண்ணனுமாவான் என்பதை ஓர்ந்தோ, மற்று ஓராமலோ, "கண்ணனே இவன் கண்டிரும் பின்'' என்று தேற்றத் துணிந்தனள். மொழிநய முணர்வாராதலின் கம்பர், இப்பரிசு இயம்புதற் கமைந்த அவள் வாயின தருமையை 'வண்ணவாய்' என்று பாராட்டுகின்றனர்.

எவ்விலக்கணத்தை யெண்ணுங்கா லிவ்வரிவை, கண்ணனல்லா லவன் மானிடனென்னற் கொண்ணு தென்றோன் றுணர்த்தினள்? வடிவமை நூலிற் சொல்லும் வனப்பெலா மமைந்த இராமனது படிவத்தைப் பார்த்ததால் எய்திய முடிவன் றது. ஏனெனில் இராமன்றன் வடிவழகைக் கண்டு

பழுதி லாவொரு பாவையன் னாள்பதைத்
தழுது வெய்துயிர்த் தன்புடைத் தோழியைத்
தொழுது சோர்ந்தயர் வாளிந்தத் தோன்றலை
யெழுத லாங்கொலிம் மன்மத னாலென்றாள்.

[பழுது இல்லாத ஒரு பதுமை போன்றவள், பதைத்து அழுது, வெப்பமுடைய பெருமூச்சுவிட்டு, தன் அன்புடைய தோழியைத் தொழுது, சோர்ந்து, வருந்துபவளாகி, "இந்த மேன்மகனைப்போல் மன்மதனாலும் சித்திரம் எழுத முடியுமோ'' என்றவள்]

வேறொருத்தி. இராமனது மெய்யையே நோக்கியிருக்கின்றாள்; அதனைக்கடந்து, அவன் மெய்ப்பொருள் என்பதை இன்னும் உணர்ந்திலள் இவள். மற்றுக் "கண்ணனே இவன்'' என்று துணிவுறக்கழறிய வக்காரிகையோ, அவ்வனகன்றன் அங்கவிலக்கணத்தை ஆதாரமாகவைத்துப் பேசினவ ளல்லளென் றுணர்த்தவே கம்பர், "காணுங்கால்'' என்னாது "எண்ணுங்கால் இவ்விலக்கண மெய்திட மானிடற் கொண்ணுமோ'' என்று அவளை இயம்பவைத்தனர். ஆதலால், அவயவ இலக்கணம்பற்றி அறைந்திலாளெனின், இராமனது தத்துவ இலக்கணத்தை உன்னியே இது உணர்த்தலாயினள். தத்துவப்பொருளின் இலக்கணங்கள் இராமன்பால் இருப்பன சில முன்னரிங்குக் குறிப்பிடலாயின. ஆன்மகோடிகள் அடைதற்கவாவும் தன்மை அத்தத்துவ இலக்கணங்களினொன்றாயவாறு இப்படலமடங்கலும் நிகழ்கின்றது. நம்மைப் படைத்தவர் கடவுளோ, மற்று நாமேதான் கடவுளைப் படைத்தோமோ என்ற ஐயத்திற் கிலக்காகுமத் தன்மை, பரம்பொருளேபோல் இராமன்பாலும் வழங்கலாயிற்று. கடவுளைக் கையோ மெய்யோ வெனத் தெற்றனத் தேராதாரினுஞ் சிலர், கண்டவ ருய்வர் என்னுங் கொள்கைய ராமாறு புரிகின்ற இலக்கணமும் இராமனைச் சார்ந்திருந்தது. அவாவினல் ஆராதிப்பர் நாடியபொருள் கைகூடாக்காலக் கடவுளை அருளிலானென இடையிடையே இகழ்வாராகும் இலக்கணத்திற்கிணங்க இராமனும் அம்மடவார் சிலர் வசைக்கு இலக்காயினன். இவைகளல்லால், பரம்பொருளிற்குரிய இலக்கணங்கள் இன்னுஞ்சில இராமன்பால் இருக்கக் காணலாம்.

இதுகாறும், கடவுளை அயிர்ப்பார், தேரார், தேர்ந்தும் இடையில் அவனருளில் நம்பிக்கை துறப்பார் ஆய முத்திறத்து மாந்தர்களதியற்கைகள் இராமன்பால் மாதர்சிலர் புரிந்த செய்கையிற் றோன்றலாயின. இனிக் கடவுட் கருத்துடையோர்மாட்டு எவ்வெவ்வகை நினைவுங் கருமும் நிகழ்கின்றனவோ அவைகளும் இந்நங்கையரிடத்து நிகழாம லிருக்கவில்லை:—

இராமனைக் காணுதற் குரியவ தானே யென்னுந் தருக்கினல், மற்றவ ரவனை உற்றுநோக்கினரைக் கறுவுகின்றாள் செய்தியை,

[பாராள்

தாக்கணங் கனையாண் மேனி தைத்தவேள் சரங்கள்
வீக்கிய கலனுந் தூசும் வேறுவே றன தோராள்
ஆக்கிய பாவையன்ன ளொருத்தியாண் டமலன்மேனி
நோக்குறு வாரையெல்லா மெரியெழ நோக்குகின்றாள்.

[மோகினி போன்றவள் ஒருத்தி, தன் உடலில் பாய்ந்த மன்மதனது பாணங்களைக் கருதாமலும், தான் அணிந்துள்ள

ஆபரணங்களும் ஆடையும் கழன்று நீங்கியதை அறியாமலும், செய்துவைத்த பதுமைபோன்றவளாய் அசையாதிருந்து, அங்குக் குற்றமற்ற இராமபிரானைப் பார்க்கின்றவர்களை யெல்லாம் கோபத்தீ தன் கண்ணிற் பறக்கப் பார்க்கலாயினள்]

என்று கம்பர் எடுத்து எழுதுகின்றார். இது அவ்வியத்தால் நேர்ந்ததென்றே எண்ணல் வேண்டும்.

கடவுளைக்கண் டுவப்பாரை ஆராயுங்கால் அவர் இருவகைப் பிரிவினி லடங்கக் காணலாம். தம்பொருட்டுக் கடவுளைப் பெற்றிருக்க வேண்டுபவர் ஒருவர்; கடவுள்பொருட்டே அவரை அடைதற் கெண்ணுவார் மற்றவர். முதலவர், தாணி யில்லம் தனம் முதலியனபோல் கடவுளுந் தமக்குக் கைகூடவேண்டிய செல்வ மொன்றென்னுங் கருத்தினர். இன்னோர், தம் மெய்வருத்தம் பாராமல் வேறுள செல்வங்கள் சிதைவதையும் நோக்காது, மானமுங் கருதாது, குறிக்கொண்ட கருமமே கண்ணாயினர்போல், கடவுளைத் தங் கைப்பொருளாக்க முயல்கின்றனர். அன்னவாறு, இத்தையலும், "மேனி தைத்தவேள் சரங்கள் பாரான், வீக்கியகலனுந் தூசும் வேறுவே றனதோரான்" ஆகி இராமனைத் தனக்கே உடைமை ஆக்கிக்கொள்ளும் ஊக்கமே மேற்கொண்டு ஆக்கிய பாவையன்ன ளாயினள். இனி, தாம் எண்ணிய செல்வத்தை எய்தி வருவோர், அவ்வாறு எய்துதற்குத் தாம் ஒருவரே உரியவர் என்றெண்ணி, அத்தகைய முயற்சியி லீடுபட்டிருக்கும் மற்றவரை, "என்னே இவர் செருக்கு; இவரும் என்போ லிச் செல்வத்தை எய்தமுயலும் நினைவு கொண்டனரோ" என்று பெரிதுஞ் சினத்தல் இயற்கையுடைத்தே. கடவுளையுஞ் செல்வத்தி லொன்றென் றீட்டுதலிற் றலைநின்றோரும் இவ்வியற்கையில் வேறுபடார். கடவுளைத் தனக்குரிய தனியுடைமை என்று எண்ணப்புகின், அக்கடவுள் தமக்கும் வேண்டுமென நச்சினார்போன்று தோற்றும் பிறர்யாவரும் தனக்கு எதிரிகளாதல் வேண்டுமெனுங் கொள்கை யிந்நிலைக்கு இன்றியமையாததே. ஆதலின் இந்நங்கையும், "அமலன்மேனி நோக்குறுவாரையெல்லா மெரியெழ நோக்குகின்றாள்" ஆயினள். காதலின் ஔவியம் போல் (Love's jealousy) நிகழ்த்துகின்ற இந்நோக்கம் கடவுள்நிலைக்கும் ஏற்றதாயிருப்பதால், இராமனு மந்நாள் அக்கடவுளிலக்கணத்தின் மெய்ம்மையைத் தன்பால் தோற்றுவித்தனன்.

தமக்கே தகுந்ததோர் உடைமை அக்கடவுள் என்று தருக்குவார் கிடக்க, கடவுளின்பால் கடவுளிற்காகவே அன்புபூண்டு, கன்றினைக்கண்ட பசுவெனக் காரணமின்றியேயும் அகங் குழைந்தியங்கும் பெற்றியராய மறுவகை மாந்தரனையார் சிலர் அம்மாதருள் இருந்ததையுங் கம்பர் செவ்விதின் உணர்த்துகின்றார்.

> பெருத்த காதலிற் பேதுறு மாதரின்
> ஒருத்தி மற்றங் கொருத்தியை நோக்கியென்
> கருத்து மவ்வழி கண்டதுண்டோ வென்றாள்
> அருத்தி யுற்றபின் னாணமுண் டாகுமோ.

[மிகுந்த அன்பினால் மதிமயங்கிய மாதர்களில் அங்கு ஒருத்தி மற்றொருத்தியைப்பார்த்து, "என்ன, என்னைப்போல் உன் கருத்தும் இராமனைக்கண்டு அறிந்ததுண்டோ" என்றாள்.—அன்புதான் அடைந்தபின் நாணம் தோற்றுமோ !]

கடவுளைக் கருத்துமுற்றத் துய்த்திருக்கு மின்பமும், இன்னபடி என்று ஏனையோர்க் கலகியம்பிடவியலாததால், அகப்பொருள் நிலையேயாம். தலைமகன் தலைவியென்ற தன்மையில் கூடுவார்திறத்தில் முதலில் தோன்றுவது நாணம். அவ்விதங் கூடினார் உற்றதோர் இன்பத்தைப் பிறர்க்குரைத்து, அவர்தாம் அனுபவித்திருக்கின்ற இன்பத்தோடு ஒப்புநோக்கிக் கொள்ளாவகை நாணம்வந் திடைநிற்கும். எனினும் அவ்வன்பானது மிகமிகமுதிர்ந்து வரம்பிகந்ததாகுங்கால் நாணமும் நீங்கி, தனதின்பத்தைப் பிறர்க்குரைப்பது மல்லாமல் அவரோ டதனைப் பகிர்ந்துகொண்டவர்போல் பாவிப்பாரு மாகின்றனர். அகப்பொருள் துறைகளில், தலைமகன் காதலிற்கும் அவனால் வரும் இன்பத்திற்கும் உரியவள் தலைமகள் ஒருத்தியேயாயினும், தலைமகளும் தோழியும், 'நம் காதலர்' என்றும், 'எந்தலைவர்' என்றும் உளப்பாட்டுத்தன்மைப் பன்மையில் யாதும் வேற்றுமையின்றிப் பேசலாகின்றதே இதற்கு ஆதாரமாகும். இதனை உட்கொண்டு கம்பர், "அருத்தியுற்றபின் நாண முண்டாகுமோ!" என்றனர். இங்கு ஒருத்தி மற்றொருத்தியை நோக்கி, "நங்காய், இவ்விராமனைக்கண்டக்கால் என் மனதில் ஓர் இன்பம் ஊறுகின்றது. நீயும் அவனை நோக்குகின்றாய். உன் முகக்குறியைப்பார்த்தால் உனக்கும் அவ்வகை இன்பம் விளைவதுபோல் தோன்றுகின்றது. எனின், என்வழியே உன்கருத்தும் அவன்பால் அமைந்ததுண்டோ, இயம்புவாய்" என இனிதின் வினவுகின்றனள். இது அவ்வியம்பற்றிவந்த கோபத்தால் வினவியதன்று. அவ்வாறாயின், முன் 'நோக்குவாரை யெல்லாம் எரியெழ நோக்கினவள்' போன்றே இவளும் ஆகிக் கூறியதுகூற லென்னுங் குற்றத்திற் கிக்கவியை ஆளாக்குவாள். இராமனைத் தான் கண்டவாறே மெய்யின்பக்கருத்தோடு பிறருங் காணவேண்டுமென்ற அருத்தியால் ஆதரத்துடன் நேர்ந்த மாற்றமிது.

இதுவே அனையதோர்நிலைமையைக் கடவுளுணர்ச்சி யெய்தப்பெறுவார் திறத்திலுங் காணலாம். கடவுளனுபவம் சிறிது பெறுபவர் முதலில் அதனைப் புறத்தே சொல்ல நாணுவர். அதனினும், அவ்வுணர்வு இல்லாதார்மாட்டு உரைக்க அவர் நாப் பெரிதுங் கூசும். ஆனால், பக்தி முதிரமுதிரத் தம் அனுபவ இன்பமே தலைக்கொண்டு கூச்சந் தெளிந்தாராகித் தம் அகத்துறு நிகழ்ச்சியை விளம்பலாகின்றனர். அதுவுமன்றித் தம் போன்ற அனுபவம் பெற்றவரெனத் தோன்றும் மற்றவரையும் பரிவினோடு தமராகக்கருதி அவர் அனுபவத்தை வினவி ஒப்புநோக்குவது மன்றி அவரையு மக்கடவுள்பால் ஆற்றுப்படுத்துவார். அன்னவரில் ஒருவராக இந்நங்கையு மிருக்கும்படி புரிந்ததால் இராமனிடத்தில் கடவுளினவ் விலக்கணம் இருக்கக் காணலாம்.




## ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

## நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷுர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷுர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

## குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

## பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

„ சாதாரண கட்டடம் „ 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... | ... ரூ | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் | ... | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... | ... | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் | ... | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... | ... | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனுக எழுத ரூ. 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதந் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

‘அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது’ என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

## கௌசிக சிரோ கல்பம்

உங்கள் சிரோகத்திற்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரக்கூடிய தைலத்தை நீங்களே செய்து உபயோகியுங்கள்.

போலித்தைலங்களையும் குணமற்ற எண்ணெய்களையும் (Hair Oils) விலைகொடுத்து வாங்கி ஏமாறாதீர்கள்.

கௌசிக சிரோகல்பத்தைப் பசும்பாலில் கரைத்துச் சரியளவு சுயமான நல்லெண்ணெய் சேர்த்து நெருப்பில் கொதிகவைக்க ஜலம் பூராவும் சுண்டிச் சுத்தமான தைலம்மட்டும் தனியாக நிற்கும். இத்தைலத்தை எடுத்து ஒருமண்டலம் உபயோகிக்க, மண்டையிடி ஒற்றைத்தலைவலி கண் எரிச்சல் மூளைக்கொதிப்பு இன்னும் சிரம் நேத்திரங்கள் சம்பந்தமான எல்லாவியாதிகளும் போய்விடும்.

பாக்கெட் ஒன்றிற்கு விலை அணு, 8, தபாற்கூலி வேறு. இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை,



# வர்த்தமானம்

ஸ்ரீ S. சீனுவாஸ ஐயங்கார் விடுத்த சுற்றுக்கடிதச் சுருக்கம் வருமாறு:— காமன்ஸ்சபை வாதம் எனது அபிப்பிராயத்தை ஊர்ஜிதப் படுத்திவிட்டது. இந்தியாவில் குடியேற்றநாட்டு அந்தஸ்த்தை உடனே ஸ்தாபிக்கச் சர்வகட்சி மஹாநாடு கூட்டப்படுமாவென்று இந்தியர்கொண்ட சந்தேகம் காமன்ஸ் சபை வாதத்தினின்று நிவர்த்திசெய்யப்படவில்லை. இந்தியா மந்திரி மிஸ்டர் பேன் லிபரல் கட்சியினரையும்லாயிட் ஜியார்ஜையும் கண்டித்தாரேயொழிய நமது கேள்விக்குப் பதில் ஒன்றும் தரவில்லை. மாண்டேகு அறிக்கையின் வியாக்யானமே வைசிராய் அறிக்கை என்று அவர் சொன்னர். இதிலிருந்து குடியேற்றநாட்டு அந்தஸ்து அளிக்க முயற்சியொன்றும் நடைபெறாது என்பது விளங்கவில்லையா. இந்த வருஷக் கடைசிக்குள் குடியேற்றநாட்டு அந்தஸ்தை வழங்க அரசாங்கத்தார் ஒப்புக் கொள்கின்றனராவென்று பார்ப்போம. அப்படி ஒன்றும் செய்யாவிடின் நாம் ராஜப்பிரதிநிதி அறிக்கையை நிராகரித்துவிடவேண்டும். முதன்முதல் ராஜப் பிரதிநிதியின் அறிக்கையை ஒப்புக்கொண்ட பால்டுவின் தமதுகட்சியினர் கலைத்தபிறகு அறிக்கையைத் தாம் அங்கீகரிக்க முடியாதெனத் தந்திரமாய்க் கூறிவிட்டார். இந்தத் தொழிற்கட்சி அரசாங்க காலத்தில் குடியேற்ற நாட்டுரிமை இந்தியாவிற்கு வழங்கப்படாதென்பது பேன்னின் பேச்சிலிருந்து ஊன்றிக் கவனித்தால் விளங்கும். இந்தியாமந்திரியும், ராஜப்பிரதிநிதியும் குடியேற்றநாட்டு அந்தஸ்து அளிக்கவே சர்வகட்சி கூடுகின்றது என்று உறுதி கூறுதவரை காங்கிரஸ் சர்வகட்சி மஹாநாட்டை ஏற்றல் கூடாது. கல்கத்தாவில் காங்கிரஸ்செய்த தீர்மானத்திலிருந்து காங்கிரஸ் கட்சியார் விலகாதிருக்க வேண்டும்.

***

காமன்ஸ் சபையில் இந்தியா:—சென்றவாரம் பார்லிமெண்டு காமன்ஸ் சபையில், இந்திய அரசியல் திருத்த விஷயமாய் ஆலோசனை நடந்தது. அப்பொழுது மிஸ்டர் பால்டுவின் பேசியதாவது:—

சரித்திரத்தையே அறியாத காலத்தில் உலகத்திற்கு நாகரித்தைத்தந்தவர் ஆரியர்கள். மத்திய ஆசியாவிலிருந்த அவர்கள் தங்கள் இருப்பிடத்தைவிட்டு வெளிக்கிளம்பினர். அவர்களில் ஒரு பிரிவினர் மேற்கே சென்று ஏதன்ஸ், ரோம் முதலிய நாடுகள் சென்றனர். ஐரோப்பியர்களினிடம் இன்னும் ஆரியரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது. அவர்கள் தந்த பாஷையே மேனாட்டார்பேசும் பாஷை; மற்றொருபிரிவினர் இமயமலையைக் கடந்து இந்தியா சென்றனர். எனவே ஆரியர்களே நமது முன்னோர்கள். இப்பொழுது எவ்வளவோ வருஷங்கள் சென்ற பிறகு அந்தமுன்னோர்களுடைய சந்ததியார்களாகிய நாம் தெய்வசங்கல்பத்தால் ஒன்றாய் இணைக்கப்பட்டு உலக சரித்திரத்திலேயே இதுவரை யாருக்கும் நேராதபடியான ஒரு பிரச்னையை முடிவுசெய்ய வேண்டியவர்களாயிருக்கின்றோம்

மேற்குத்திசை சென்ற நமது முன்னோர்கள் அரசியல் சாமர்த்தியத்தை வளர்த்தனர். இந்தியா சென்றவர் ஸத்வகுணத்தை வளர்த்துத் தூயவாழ்வுபெற்றனர். அரசியல் துறைகளில் முன்போகியுள்ள நாம், நமது சகோதரர்கள்பால் ஜனநாயக முறையைப் பரவச்செய்யும் பரிக்ஷையைத் துவக்கியுள்ளோம் 1917 வருஷத்து அறிக்கையில் இந்தியாவிற்குப் பொறுப்பாட்சி தருவதே பிரிட்டிஷாரின் நோக்கமென்று கூறியுள்ளோம். இச்சபையினர் அந்த வாக்குறுதியை மறந்துவிடலாகாது.

இங்கிலையில் சைமன் கமிஷனின் பொறுப்பு மிகவும் அதிகமானது. எனவே கமிஷனர்கள் ஜனங்களின் நம்பிக்கைக்குறைவு ஏற்படாதபடி காரியம் செய்யவேண்டும். பார்லிமெண்டார் அபிப்பிராயத்தை ஏற்று அதைப் பக்கபலமாகக் கொள்ளவேண்டும். இப்பொழுது இந்தியப் பொறுப்பாட்சியின் விவரத்தைப்பற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லையாயினும், இந்தியா மற்றக்குடியேற்ற நாடுகளுடன் சம உரிமை பெறும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அஸ்திவாரம் போடப்படவேண்டும் என்று கூறுவேன்.

மிஸ்டர் லாயிட் ஜியார்ஜ்:—சைமன் கமிஷனர்கள் யாதாஸ்த்தை வெளியிடுமுன், இந்தியர் பொறுப்பாட்சி ஏற்பட்டுவிட்டதாக நினைக்கும் வகையில் அறிக்கை எதுவும் வெளியிடப்பட்டிருத்தலாகாது. அப்படியிருக்க அவசரமாய் அறிக்கை வெளியிடப்பட்டதால் நமது நாட்டிலேயே பிளவுகள் ஏற்பட்டுவிட்டன. இந்தியா விஷயத்தில் முடிவுகூறும் அதிகாரம் பெற்றவர்கள் சைமன் கமிஷனர்களே. ராஜப் பிரதிநிதியின் அறிக்கை இந்தியாவில் ஒருபுதிய கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது. இந்தியா மந்திரி இப்பொழுது ராஜப்பிரதிநிதியின் அறிக்கையை இந்தியர் தப்பர்த்தம் செய்துள்ளார்கள் என்று கூறுவாரா? அப்படி அவர் கூறுவிடில் இந்த அறிக்கை அனர்த்தம் விளைக்கும்.

மிஸ்டர் வெட்ஜ்வுட் பேன்—இந்த வாதத்தில் ராஜப்பிரதிநிதி அறிக்கையை மிஸ்டர் லாயிட் ஜியார்ஜ், வருந்தக்கூடிய வழியில் வீண்வாதமாகச் செய்த பிரசங்கத்திற்கு நான் மறுமொழிகூற விரும்புகிறேன். ராஜப் பிரதிநிதியையும் அவரது அறிக்கையையும் இச்சபையில் எவரும் இழுக்கமாட்டார்கள் என்று நான் எண்ணினேன். ராஜப் பிரதிநிதி விடுத்த அறிக்கை, மிஸ்டர் மாண்டேகு செய்த அறிக்கைக்கு விளக்கமே ஆகும். ஆதலால் ராஜப் பிரதிநிதியின் அறிக்கையால் குடியொன்றும் கெட்டுப் போகவில்லை. மாண்டேகுவின் அறிக்கைதான் கவர்ண்மெண்டிற்கு ஆதாரம் இதுதான் எங்கள் நிலைமை இதை நிறைவேற்றி வைக்கவே எண்ணியுள்ளோம். எதிர்க்கட்சியாரின் எதிர்ப்பு நியாயமற்றது. ராஜப்பிரதிநிதி இந்திய நிலைமையை அநுசரித்துத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். நாங்கள் அதை ஏற்காது மறுத்தாலும் மறுக்கலாம். ஆனல் எங்கள் அபிப்பிராயத்திற்கு 1917-ம் வருஷ அறிக்கை ஒத்ததாயிருக்கின்றது. மேலும் பிரிட்டிஷ் கொள்கையைப்பற்றி இந்தியாவில் சந்தேக மேற்பட்டிருக்கிறதென்று கண்ட ராஜப்பிரதிநிதி, அச்சந்தேகத்தை நிவர்த்தி செய்யவே இக்காரியத்தைச் செய்தார். நாங்களும் அவர் செய்ததை ஏற்கின்றோம். இந்த அறிக்கையால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் மேல் இந்தியருக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டதா என்று பலர் என்னைக்கேட்டனர். அறிக்கை வெளியான மறுநாள் வந்த தந்தியின் மூலம் இந்த அறிக்கையால் நல்ல பயன் ஏற்பட்டதென அறிந்து மகிழ்ந்தேன். எல்லாக்கட்சியினரும் ஒன்றுபட்டனர். முழுவிடுதலை இயக்கம் வெகுதூரம் தடைப்பட்டு விட்டது.

வேறு சிலரும் பேசினர். கூட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருகையில், மாக்டொனல்டு ராஜப் பிரதிநிதியின் அறிக்கை நல்ல சமயத்தில் வெளியிடப்பட்டதென்றும், இதனல் சைமன் கமிஷனுக்குக் கெடுதல் ஒன்றும் ஏற்படவில்லையென்றும் கூறினர்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET,*

**Purasawalkam MADRAS.**

189080

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நீஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,*

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

*E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தனார் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—

| | | | | |
|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | உள்நாடு | ரூ 8—0—0 | வெளிநாடு | ரூ 9—8—0 |
| ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு | ரூ 10—0—0 | வெளிநாடு | ரூ 11—8—0 |
| காலிகோ பயிண்டு | உள்நாடு | ரூ 9—8—0 | வெளிநாடு | ரூ 11—0—0 |

**கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை**

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L (Editor)